உ
சிவமயம்

சிவபூமி

Monthly Journal of Sivapoomi

அறிமுக விலை :- 20/=

தொலைபேசி - 021 222 7938

Email - sivapoomiprinters@gmail.com

சிவம் - 01 | விளம்பி வருடம் சித்திரைத் திங்கள் 27ஆம் நாள் 10.05.2018 | பூமி - 03

இணுவில் கிராமத்தில் சிறுவர்களுக்கான வைத்தியசாலை

யாழ். போதனா வைத்தியசாலை ஏற்பாடு

யாழ். இணுவில் கிராமத்திலுள்ள 120 ஆண்டு கால வரலாற்றுப் பெருமைபெறும் மக்லியோட் வைத்திய சாலை அமைந்துள்ள பெருநிலப்பரப்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுவர் வைத்தியப் பிரிவு அமைய விருக்கிறது என்பது அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய் தியாகும். யாழ். போதனா வைத்தியாலையின் பணிப் பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்களின் முயற்சியினால் உருவாகவுள்ள சிறுவர் வைத்தியப் பிரி- வானது மிகச் சிறந்த நவீன வசதிகளுடன் அமையவிருக் கிறது.

இணுவில் கிராமத்தில் அமைந்துள்ள மேற்படி பழம் பெரும் வைத்தியசாலையானது 1898ஆம் ஆண்டு மக்லி யோட் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது. இது மிகவும் பிரபல்யமான மகப்பேற்று வைத்தியசாலையாக விளங்கியது. கடந்தகால யுத்தச் சூழ்நிலைகளால் வைத் தியசாலையின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு, அங்குள்ள பல பாரிய கட்டடங்கள் அழிவுற்ற நிலைக்குள்ளானதால் பலரும் கவலை தெரிவித்திருந்தனர். பயன்பாடின்றி, இப் பாரிய வைத்தியசாலையின் பெரும்பகுதி அழிந்து கொண் டிருந்த நிலை கண்டு பலரும் இதனை நல்ல காரியங்களுக் குப் பயன்படுத்த வேண்டும் என குரல் கொடுத்து வந்தனர். யாழ்.பல்கலைக்கழக அபிவிருத்திக்கு வைத்தியசாலை வளாகத்தை வழங்க வேண்டும் எனவும் சிலர் கருத்து வெளியிட்டு வந்தனர்.

இதே வேளையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறுவர் வைத்தியப் பிரிவுக்கு அரசாங்கம் புதிய கட்டு மாணத் தொகுதியை உருவாக்கத் திட்டமிட்ட போதும், வைத்தியசாலையில் இடநெருக்கடியாக இருந்ததை கருத் தில் கொண்டு இப்பணி தாமதமாகியது. இதனால் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சிறுவர் வைத் தியப் பிரிவு அமைப்பதற்கான புதிய நிலத்தை தேடும் முயற்சியில் ஈடுபட்டார்.

இந்நிலையில்தான் இணுவில் மக்லியோட் வைத் தியசாலை நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு, பேச்சு வார்த்தை நடத்தி மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சி களின் பயனாக இக்கைங்கரியம் கைகூடியிருக்கிறது. கொழும்பில் உள்ள லேடி றிஜ்வே சிறுவர் வைத் தியசாலைக்கு நிகராக, யாழ்.போதனா வைத்திய சாலையின் சிறுவர் வைத்தியப் பிரிவும் அமையவிருப் பதுடன் விரைவில் அதற்கான கட்டுமானப்பணிகளும் ஆரம்பமாகவிருக்கிறது.

நிறைந்த நிழல்தரு மரங்களுடனான நிலவளமும், நல்ல நீர் வளமும் கொண்ட இணுவில் மக்லியோட் வைத் தியசாலை வளாகம் மீண்டும் பழைய பொலிவைப் பெறவிருப்பது சிறப்புக்குரிய விடயமாகும். இப்பாரிய முயற்சி வெற்றியளிப்பதற்கு யாழ்.போதனா வைத் தியசாலை நிர்வாகத்துக்கு அனைத்து சமூக நிறுவனங் களும் ஒத்துழைப்பு வழங்குவது காலத்தின் கட்டாயம் ஆகும்.

வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலய மகோற்சவம்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 10ஆம் திகதி மாலை திருக்கைலாசவாகனத் திருவிழாவும், 11ஆம் திகதி மாலை முத்துச்சப்பரத் திருவிழாவும், 14ஆம் திகதி மாலை திருமஞ்சத் திருவிழாவும், 16ஆம் திகதி மாலை தங்கச்சப்பரத் திருவிழாவும், 17ஆம் திகதி மாலை பெரிய சப்பரத் திருவிழாவும், 18ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும், 19ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும், 20 ஆம் திகதி மாலை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெற இருக்கின்றன.

அவுஸ்திரேலியா தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அன்பர்கள் ஏற்பாடு செய்து நடாத்திய "சிவபூமி இனிய இரவு" நிகழ்வுக் காட்சிகள்

அவுஸ்திரேலியா சிட்னியில் நடந்த மூத்த தமிழ் பிரஜைகள் சங்கத்தின் புதுவருடக் கொண்டாட்ட நிகழ்வு

நினைவலைகளில் சிற்பச்சக்கரவர்த்தி ஜீவரத்தினம்

யாழ்.குடாநாட்டில் உள்ள ஆலயங்களுக்கு பல சித்திரத் தேர்களையும் கைலாச வாகனம் மற்றும் கலை நுட்பங்கள் கொண்ட இரதங்களையும் உருவாக்கிய சிற்பச்சக்கரவர்த்தி அமரர்.ஆ.ஜீவரத்தினம் அவர்களை நீள நினைக்கின்றோம். இலங்கையின் ஆளுநராக இருந்த சோல்பரி பிரபுவினால் பெரிதும் பாராட்டிப் போற்றப்பட்ட சிற்பக் கலைஞரான திருநெல்வேலி ஆறுமுகம் அவர்களின் புத்திரராகிய இவர் தனது கலைத்திறமைக்காகப் பல விருதுகளைப் பெற்றவர். திருக்கேதீஸ்வரத்தில் பஞ்சரதங்களை உருவாக்கிய பெருமையும் இவரைச் சாரும். இக் கலைஞரால் வடிவமைக்கப்பட்ட சித்திரத்தேர்கள் அவர் நினைவை என்றென்றும் சொல்லிக்கொண்டே இருக்கும். இன்னொரு பிரபல சிற் பக்கலைஞரான கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்கள் இவரது உடன்பிறந்த சகோதரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூமி

சிவம் - 01 10.05.2018 பூமி - 03

சிந்தனை செய்வோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த பீடம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் அமைந்த பெருநிலப்பரப்பு சேர் பொன். இராமநாதன் அவர்களுக்கு உரியது. அப்பெருமகன் 1916 ஆம் ஆண்டு பரமேஸ்வரா கல்லூரிக்கு அடிக்கல் நாட்டும் போது, இக்கல்லூரியின் நோக்கம் எதிர்காலத்தில் சைவத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனமாக உருவாக வேண்டும் என சிந்தித்தார். அவரது கனவு 1974ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகமாக தோற்றம் பெற்றது. யாழ். பல்கலைக்கழகம் உருவாகிய அன்று இந்து நாகரிகத்துறைக்கும் அங்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த துறை தனிப்பீடமாக உருவாக வேண்டும் என பலரும் ஆவல் கொண்டனர். நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக எம்மவர்கள் இதுவிடயத்தில் அதீத அக்கறை செலுத்தாமையால் இந்தப் பீடம் ஆரம்பிப்பதற்கான சூழல் உருவாகவில்லை. இது தொடர்பாக பலர் மேடைகளில் பேசியும், கட்டுரைகள் எழுதியும் வந்துள்ளனர். யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்ததுறை வளர்ச்சிக்கு சில அறக் கட்டளைகள் கூட ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தற்போது யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்த பீடம் பற்றிய சிந்தனை நனவாகும் வாய்ப்பு எட்டியுள்ளது.

யாழ். பல்கலைக்கழத்தில் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்கள் துணைவேந்தராக பணியாற்றிய காலத்தில் இப்பீடத்தை உருவாக்குவதற்கு ஒரு திட்டமிடல் குழுவை நியமித்திருந்தார். இந்தக் குழு நீண்ட நாட்களாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தது. இந்து நாகரிகத்துறை தலைவராக விளங்கிய பேராசிரியர் மா. வேதநாதன் அவர்கள் தலைமையில் இந்து நாகரிகத்துறையினரும், பேராசிரியர் ஸ்ரீசற்குண ராஜா போன்ற ஆர்வலர்களும் திட்ட அறிக்கையை தயாரிப்பதில் மிகவும் கவனம் செலுத்தினர். இந்த அறிக்கை பல்கலைக்கழக பேரவையால் ஆராயப்பட்டு, இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இக் குழு இந்த விடயத்தினை ஆராய்ந்து சிபார்சு செய்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு உறுப்பினராக விளங்கும் பேராசிரியர் இ. குமார வடிவேல், இப்பீடத்தின் அவசியம் பற்றியும் நன்கு எடுத்துரைத்து உள்ளமையை அறிய முடிகின்றது. வெகு விரைவில் யாழ். பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த பீடம் ஆரம்பிக்கப்பட விருப்பது பெருமைக்குரிய விடயமாகும். இந்தப் பீடத்தின் செயற்பாடுகளால் சைவ சமயத்தவர்களின் வாழ்வியலில் ஓர் எழுச்சி ஏற்பட வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும். தமிழர்களது பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்கள் சைவ சமயத்தோடு இரண்டறக் கலந்திருப்பதை எவரும் மறக்க முடியாது. சைவசமயத்தை தவிர்த்து, தமிழர் பண்பாட்டை ஆராய முடியாது.

யாழ். பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த பீடம் ஆரம்பமாகும் நன்னாளை எதிர்பார்த்து பலரும் காத்திருக்கிறார்கள். பரமேஸ்வரப் பெருமானின் திருவருளால் இக்கைங்கரியம் விரைவில் நிறைவேற வேண்டும் என நாமும் பிரார்த்திக்கின்றோம்.

இம்மாதத்தில் இந்துக்களது விரத நாட்களும் விசேட தினங்களும் (மே 2018)

03	வியாழன்	:	சங்கரஹர சதுர்த்தி
07	திங்கள்	:	நடேசர் அபிஷேகம்
11	வெள்ளி	:	ஏகாதசி விரதம்
13	ஞாயிறு	:	பிரதோஷ விரதம்
15	செவ்வாய்	:	அமாவாசை விரதம்
			கார்த்திகை விரதம்
18	வெள்ளி	:	சதுர்த்தி விரதம்
20	ஞாயிறு	:	சஷ்டி விரதம்
25	வெள்ளி	:	ஏகாதசி விரதம்
27	ஞாயிறு	:	பிரதோஷ விரதம்
28	திங்கள்	:	வைகாசி விசாகம்
29	செவ்வாய்	:	பூரணை விரதம்

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் திருமுறை முற்றோதல்

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இம்மாதம் 10ஆம் திகதியன்று திருமுறை முற்றோதல் ஆரம்பமாகின்றது. தேவஸ்தான திருமுறை மடத்தில் தினமும் நிகழ்வு இடம்பெறும். இந்த திருமுறை மடத்தை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் தனது சொந்தச் செலவில் கட்டி, அதனை தன் உபயமாக ஆலயத்திற்கு வழங்கியவர். இந்த திருமுறை மடத்தில் ஆண்டுதோறும் பல அடியார்கள் ஒன்றுகூடி பன்னிரு திருமுறை முற்றோதலை நிகழ்த்தி வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வகையான சிறப்புப் பெறும் வைகாசி விசாகம்

தமிழ் வருடத்துப் பன்னிரண்டு மாதக் கணக்கில் இரண்டாவது மாதமாகிய வைகாசி மாதத்தில் பௌர்ணமியுடன் விசாக நட்சத்திரம் சேர்ந்துவரும் நாள் வைகாசி விசாகம். விசாக நட்சத்திரத்தில் பௌர்ணமி கூடிய மாதம் ஆதலால் வைகாசி எனப்பட்டது. விசாகம் ஆறு நட்சத்திரங்கள் ஒருங்கு கூடியதொன்று. இந்நாள் சோதி நாள் எனவும் அழைக்கப்படுகின்றது.

இது பூட்டீஸ், ஹெர்க்குலீஸ் என்னும் நட்சத்திரக் கூட்டங்களுக்கு இடையில் சிறிது தெற்கிலுள்ள அழகான மண்டலம். ஐந்து நட்சத்திரங்கள் சேர்ந்து ஒரு கிண்ணம் போல் இருக்கும். இந்த மண்டலத்தில் முதல் மூன்று கால்கள் துலாத்திலும் கடைசிக்கால் விருச்சிகத்திலுமாக இருக்கின்றன. இந்த நட்சத்திரத்தின் அதிபர் குரு. விசாக நட்சத்திரத்திற் பிறந்தவர்களுக்கு குரு திசையே தொடக்க திசையாகும்.

வைகாசி விசாக நாளில்தான் சிவனின் ஐந்து முகத்துடன் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகனாக அவதாரம் எடுத்தார் முருகப் பெருமான். முருக வழிபாட்டிற்கு உகந்த நாட்களில் முக்கியமானது வைகாசி விசாகம். கந்தனாகிய சக்தி வெளிப்பட்ட திருநாள். முருகனுக்கு விசாகன் என்ற பெயரும் உண்டு. "வி" என்றால் பட்சி (மயில்). சாகன் என்றால் சஞ்சரிப்பவன். அதாவது மயில் மீது வலம் வரும் இறைவன் என்பது பொருள்.

வைகாசி மாதத்தில் சூரியன் ரிஷபராசியில் இருக்கின்றார். அவர் அங்கிருந்து ஏழாம் பார்வையாக விசாக நட்சத்திரத்தைப் பார்க்கிறார். விசாக நட்சத்திரத்தின் தேவதை குமரன். இவ்விசாக நாளில் முருகனை நினைத்து விரதமிருந்து காவடி எடுத்து வழிபட்டால் சகல ஐஸ்வரியங்களும் கிடைக்கும் என்பது ஐதிகம்.

திருச்செந்தூரில் வைகாசி விசாகப் பெருவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் முருகன் ஆலயங்களில் வசந்தோற்சவம், பிரம்மோற்சவம் என்பனவும் நடைபெறும்.

வைகாசி விசாகம் முருகனுக்கு மட்டுமன்றி சிவனுக்கும் உகந்த நாள். சிவனை நினைத்து கலச ஸ்தாபனம் செய்து யாக குண்டம் அமைத்து வழிபட வேண்டும்.

அம்மன் கோயில்களிலும் வைகாசி விசாகப் பெருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. கிராமங்களில் கண்ணகி அம்மன், காளி, துர்க்கை போன்ற தெய்வங்களுக்கு சடங்கு நடைபெற்று வைகாசி விசாகத்தில் திருக்குளிர்த்தி, தீ மிதிப்பு, பொங்கல் விழா என்பன நடைபெறுகின்றன. கிழக்கிலங்கையில் வைகாசி விசாகத்தில் கண்ணகி அம்மனுக்கு விழா எடுக்கப்படுகிறது. வைகாசி விசாக நாளில் இறைவனை நினைத்து வழிபட்டுக் குடை, செருப்பு, மோர், பாணக்கம். தயிர்சாதம் முதலியவற்றை தானம் செய்தால் திருமணமாகாத கன்னிப் பெண்களுக்கு மணப்பேறு கிடைக்கும் என்பதும், குழந்தை இல்லாதவர்களுக்கு அடுத்த வைகாசி விசாகத்துக்குள் மகப்பேறு கிடைத்து குலம் தழைத்து ஓங்கும் என்பதும் மக்கள் நம்பிக்கை.

வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் என்று வைணவ ஆழ்வார்களில் முதலாவதாக வணங்கப்படும் நம்மாழ்வார் அவதரித்த நாள் வைகாசி விசாக நாளாகும். இந்நாளை வைணவர்கள் நம்மாழ்வார் அவதாரத் திருநாளாகக் கொண்டாடுகின்றனர்.

திருவேட்களத்தில் அருச்சுனனுக்கு சிவ பெருமானால் பாசுபதாஸ்திரம் வழங்கப்பட்டதும் வைகாசி விசாக தினத்தில் தான்.

எமதர்மராஜன் அவதரித்த நாளும் வைகாசி விசாக நாளாகும். இந்நாளில் எமனுக்குத் தனிப்பூசை வழிபாடுகள் நடக்கும். எம பூசை செய்வதால் நோய்கள் நீங்கி நீண்ட ஆயுளுடன் வாழலாம் என்பது மக்கள் நம்பிக்கை.

(நன்றி : இந்துக் கலைக் களஞ்சியம்)

வைகாசி விசாகம் ஞானச் சிறப்புக்குரிய நட்சத்திரம். இதே நாளில் தான் பார்வதி தேவி சரவணப் பொய்கையில் தோன்றிய ஆறு குழந்தைகளை எடுத்து அரவணைத்த போது ஆறுமுகங்களும் பன்னிரண்டு கரங்களுமுடைய ஒரு குழந்தையாக உருப்பெற்றது. இதே தினத்தில் முருகப் பெருமானின் எல்லா திருத்தலங்களும் விழாக்கோலம் காணும். இந்தப் புனித நாளில் விரதம் அனுஷ்டித்து முருகன் கோயிலுக்குச் சென்று வழிபட்டால் புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தைச் செல்வம் கிடைக்கும். வீட்டில் உள்ள குழந்தைகள் அறிவில் சிறந்து விளங்குவார்கள்.

இந்து மக்கள் விரும்பிக் கொண்டாடும் பண்டிகையாக வைகாசி விசாகம் இருக்கிறது. அநீதி செய்யும் எதிரிகளை வெல்வதற்கு முருகப் பெருமான் தோன்றிய நாளே இந்த வைகாசி விசாக நாளாகும். எனவே இந்த நாளில் முருகனை வழிபடுவதால் நமது பகை அழியும் என நம்பலாம். இதனையொட்டி விரதமிருந்து, ஒருபொழுது உணவருந்தி, ஆலயம் சென்று வழிபடுவது நற்பலனைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் தொழுவது சாலவும் நன்று

அமரர் கி.வா.ஜகந்நாதன்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது தமிழ் மூதாட்டியின் அறிவுரை. திருநாவுக்கரசரோ கோயில் இல்லாத ஊர் திருஇல் ஊர் என்றும், அடவி காடென்றும் கூறினார். "திருக்கோயில் இல்லாத திருஇல் ஊரும்.... அவை யெல்லாம் ஊர் அல்ல, அடவி காடே" என்பது அவருடைய திருவாக்கு. திரு இல் ஊர் - திருமகள் இல்லாத ஊர். திருமகள் இல்லாத ஊரில் அவளுடைய தமக்கை எழுந்தருளி இருப்பாள். காடு வேறு, அடவி காடு வேறு. காட்டில் முனி புங்கவர்கள் வாழ்வதுண்டு. கொடிய விலங்கினங்கள் வாழும் காடு அடவி காடு. நாவுக்கரசர் கோயிலுக்குப் போகாத மக்களைக் குறிப்பாக இழித்துச் சொல்கிறார். கோயில் இல்லாத ஊர் அடவி காடு என்றார். அதில் குடியிருப்பார் கொடிய விலங்கினங்கள் என்று தானே கொள்ள வேண்டும்.



திருவள்ளுவர் இன்னும் ஒருபடி மேலே போகிறார். இறைவனை வணங்காத தலை பயன் இல்லாத தலை என்கிறார். ஆனால் அதற்கு உவமை சொல்லும் போதுதான் அவருடைய குறிப்புப் புலனாகிறது.

"கோள்இல் பொறியிற் குணம் இலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை"

என்கிறார். காது கேட்காவிட்டால் அது காது ஆகாது. கண் பார்வையின்றிக் கண்மணி முதலியவற்றுடன் இருந்தால் அது கண் ஆகாது. தோல் பரிச உணர்ச்சியை இழந்தால் அது தோல் ஆகாது. சுவையை இழந்த நாக்கு, நாக்கு ஆகாது . மணம் அறியா மூக்கு, மூக்கு ஆகாது. ஐந்து இரத்தினங்களும் தமக்குரிய வடிவை உடையனவாக இருந்தாலும் உணர வேண்டிய வற்றை உணராமல் இருந்தால் அவை இந்திரியங்கள் ஆகா. பொதுவாகக் கோள் இல் பொறி என்று சொன்னாலும், பொறி என்பது பால் பகா அஃறிணைப் பெயராதலின் ஐம் பொறிகளையுமே கொள்ள வேண்டும். மனிதர்களில் ஒரு பொறி இல்லாதவர்களும் இருக்கிறார்கள். ஐம்பொறிகளும் தொழிற்படாதவர் யாரும் இல்லை. ஐம்பொறிகள் வடிவுடன் இருந்தும் ஞானேந்திரியங்களாகிய அவை உணராமல் இருக்கும் நிலை உயிருடன் உள்ள மக்களிடம் இல்லை. பிணத்துக்குத்தான் ஐந்து பொறிகள் தோற்றம் அளித்தாலும் அவை தமக்குரிய நுகர்ச்சியை இழந்து வாளா இருக்கும். ஆதலின் கோளில் பொறி என்பதற்கு, பிணத்தினிடம் உள்ள பொறிகள் என்று பொருள் செய்வது நயமாக இருக்கும். அவற்றை உவமையாக்குவதால் தலையையும் பிணத்தின் தலை என்று கொள்ள வேண்டும். 'இறைவனை வணங்காத தலை பிணத்தின் தலை' என்பதையே குறிப்பாக அருளினார் திரு வள்ளுவதேவர். கடவுளை வணங்காதவர்கள் பிணம், விலங்கு, சீதேவி சேராதவர்கள் என்று பெரியோர்கள் சொன்ன தாகவே நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதனால் தான் தமிழ்நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் கோயில் இருக்கிறது. "கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்" என்று பழமொழி எழுந்தது. "ஊரான் ஒர் தேவ குலம்" என்று இலக்கண உரைகாரர்கள் மேற்கோள் காட்டுகிறார்கள்.

நாகரிகம் என்பது நகரம், நகர் என்பதிலிருந்து உண்டான சொல். நகர் என்பது பழங்காலத்தமிழ் நூல்களில் திருக்கோயிலைக் குறித்து நிற்கும். "முக்கட் செல்வர் நகர் வலஞ் செயற்கே", "பூமுடி நாகர் நகர்" என்று சங்க நூல்களில் வரும் பகுதிகள் இதைத் தெளிவிக்கும். தமிழ் நாட்டு வாழ்க்கை திருக்கோயிலைச் சுற்றியே வளர்ந்தது. நகராகிய கோயிலை மையமாக வைத்துப் பேரூரும் சிற்றூரும் வளர்ந்தன. நகரைச் சார்ந்து வளர்ந்த வாழ்க்கையை நாகரிக வாழ்க்கை என்றனர்.

இவ்வாறு கோயிலுக்குத் தலைமை அளித்து வாழ்ந்த தமிழ் மக்கள் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டார்கள். முடியணிந்த மன்னனும் சென்று வலம் வந்து வணங்கினான். குடிமக்களும் சென்று வழிபட்டார்கள். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்த வந்த காரிகிழார் என்ற புலவர் "நின் குடை மடங்கட்டும்" என்று வாழ்த்துகிறார். "குடை உலகெல்லாம் விரிந்து படரட்டும்" என்று சொல்வது தான் மன்னனுக்கு ஏற்ற வாழ்த்து. குடை, ஆட்சியின் அடையாளம். "உன் ஆட்சி எங்கும் பரவட்டும்" என்பதையே உருவக வகையால் அப்படி வாழ்த்துவது வழக்கம். காரிகிழாரோ நேர்மாறாக, "உன் குடை மடங்கட்டும்" என்றார். ஏன்? எங்கே மடங்க வேண்டும் என்பதை அவர் சொல்லும் போது தான் நமக்கு உண்மை விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பணியியர் அத்தைநின் குடையே, முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே"

என்று அவர் கூறுகிறார்.

முக்கட் செல்வரும் தவக்கோலம் உடைய வருமாகிய சிவபெருமான் திருக்கோயிலை வலம் வரும் போது, உன் குடை பணியட்டும் மடங்கட்டும்' என்று சொல்கிறார். உலகத்துக்கே அரசனானாலும் சிவராசாவுக்கு முன் அவன் பணிய வேண்டும். அவன் பதவிக்கு அங்கே பெருமை இல்லை. அதைக் காட்டும் குடையும் பணிய வேண்டும். உலகை ஆளும் கோன், இறைவன் திருக் கோயிலுக்குச் சென்று வலம் வந்து பணிந்தான் என்பதை இந்தப் புறநானூற்றுச் செய்யுள் புலப் படுத்துகின்றது.

(நன்றி : நல்லை நகர்ச் செவ்வேள் - வானொலி வர்ணனை)

மேற்படி நூலுக்கு கலைமகள் ஆசிரியர் அமரர் கி.வா.ஜகந்நாதன் அவர்கள் வழங்கிய அணிந்துரையின் ஒரு பகுதியே இங்கு கட்டுரையாக பிரசுரமாகி உள்ளது.

வைகாசி மாதத்தின் குருபூசை தினங்கள்

திருநாவுக்கரசு நாயனார் (09.05.2018)

திருமுனைப்பாடி நாட்டின் திருவாமூர் என்ற ஊரில் வேளாண் மரபில் அவதரித்தவர் திருநாவுக்கரசு நாயனார். இவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் மருள்நீக்கியார்.

இவர் சமய குரவர்களுள் ஒருவராகப் போற்றப்பட்டவர். அப்பர் என்ற பெயரிலும் அழைக்கப்பட்டார். இவர் பாடியிருக்கும் தேவாரப் பதிகங்கள் 4ஆம், 5ஆம், 6ஆம் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று திரு முறைகளிலும் 312 பதிகங்களும், அதில் 3066 பாடல்களும் அடங்கியுள்ளன. திருநாவுக்கரசு நாயனாரின் காலம் கி.பி 7, 8 ஆம் நூற்றாண்டாக அமைகிறது என வரலாறு சொல்கிறது. இவர் சித்திரைச் சதய நட்சத்திரநாளன்று முத்தி அடைந்தார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் (31.05.2018)

சீகாழியில் அவதரித்தவர் திருஞானசம்பந்தர். மூன்று வயதில் தேவாரம் பாடத் தொடங்கியவர். சமய குரவர்களுள் ஒருவராகப் போற்றப்பட்டவர்.

இவர் பாடியிருக்கும் தேவாரப் பதிகங்கள் முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று திரு முறைகளிலும் 385 பதிகங்களும், அதில் 4169 பாடல்களும் அடங்கியுள்ளன. திருஞானசம்பந்தரின் காலம் கி.பி.7, 8 ஆம் நூற்றாண்டாக அமைகிறது என வரலாறு சொல்கிறது. இவர் பதினாறு வயதில் திருமணக்கோலத்தில் திருநல்லூர்ப்பெருமணத்தில் இறைசோதியோடு கலந்ததாக சொல்லப் படுகின்றது. இவர் முத்தியடைந்த தினம் வைகாசி மூலம் நட்சத்திர நாளாகும்.

சேக்கிழார் (20.05.2018)

தொண்டை நாட்டுப் புலியூர்க் கோட்டத்து குன்றத்தூரில் சேக்கிழார் குடியில் பிறந்தவர் அருண் மொழித் தேவர் என்ற சேக்கிழார் அடிகள். இவர் கி.பி. 12ஆம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்தவர் என்று வரலாறு சொல்கிறது. சோழ அரசனின் வேண்டுகோளுக்கு இணங்க, திருச்சிற்றம்பலவன் "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுக்க பெரிய புராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணத்தை இயற்றினார். இவரது பாடல்கள் 12ஆம் திருமுறையில் அடங்கியுள்ளன. இவர் வைகாசி பூசம் நட்சத்திரநாளில் முத்தியடைந்தார்.

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஞாபகார்த்த விருது

குரும்பசிட்டி சன்மார்க்க சபை ஆண்டுதோறும் வழங்கிவரும் கலைப்பேரரசு ஏ.ரி பொன்னுத்துரை ஞாபகார்த்த விருதை இவ்வாண்டு நாடகத்துறை சார்ந்த கலைஞரான நா.விமலநாதன் அவர்கள் பெற்றுள்ளார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் இம்மாதம் 6ஆம் திகதியன்று நடத்திய ஈழகேசரி பொன்னையா நினைவு நிகழ்வின் போது மேற்படி விருதினை வழங்கி சிறப்பித்துள்ளனர்.

கலைஞர் நா.விமலநாதன் அவர்கள் 1964ஆம் ஆண்டு கோப்பாய் கிராமத்தில் பிறந்தவர். நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவராவார். 1988ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணி பட்டம் பெற்றவர். யாழ்.மத்திய கல்லூரியின் உப அதிபராகக் கடமையாற்றுகின்றார். இசை, நாடகத்துறையில் பெரிதும் ஈடுபாடு கொண்ட இவர், பல நாடகங்களிலும் முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புமிக்க சிவலிங்க வழிபாடு

சிவன் ஒரு புள்ளி வடிவானவர். அவர் பிரமா விஷ்ணுவுக்கு "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியாய்" காட்சி கொடுத்தார். மார்க்கண்டேயருக்கு சிவலிங்கத்தினூடாக சிவபெருமான் தோன்றி இயமனைக் காலால் உதைந்தார். பக்தர்கள் சிவனை லிங்க வடிவில் கோயில்களில் வழிபடுகிறார்கள்.

சிவலிங்கத்தை உலகத்தில் எல்லா நாடுகளிலும் எல்லா இனத்தவர்களும் வெவ்வேறு பெயர்களில் வழிபட்டு வந்தார்கள் என்பதற்கு சான்றுகள் பல இருக்கின்றன. அகழ்வாராய்ச்சியாளர்கள் பலர் மண்ணில் புதையுண்டு கிடந்த சிவலிங்க விக்கிரகங்களை கண்டெடுத்து இருக்கிறார்கள். சிவலிங்க வழிபாடு மதரீதியாகப் பல வித்தியாசப்பட்டாலும் இந்த சிவலிங்க வழிபாடு உலகெங்குமுள்ள அநேக மதவழிபாட்டுடனும் ஒன்றித்திருப்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

பாரத நாட்டில் லிங்க வழிபாட்டை பழம் காலத்திலிருந்தே கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். சிவலிங்கம் என்றதும் தென்னாட்டில் உள்ள சிவாலயங்களில் அமைக்கப்பட்டிருக்கும் சிவ லிங்கங்களே நினைவுக்கு வரும். "தென்னாடுடைய சிவனே போற்றி எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்றதும் நமக்கு தென்னாட்டிலுள்ள சிவன் கோயில்களே நினைவுக்கு வருகின்றன. இறைவன் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வடிவங்களில் காட்சி அளிக்கின்றார். முட்டை வடிவக் கல்லை சிவலிங்கமாகப் பாவிப்பது எங்கும் வழக்கம்.

பழங்காலங்களில் ஸ்படிகலிங்கம், மரகத லிங்கம், மாணிக்க லிங்கம் என்றெல்லாம் உயர்தர இரத்தினங்களாலும் அமைக்கப்பட்டு வந்தனர்.

ஜோதி வடிவிலும் லிங்க வழிபாடு உண்டு. இப்படி அமையப் பெற்ற தலங்கள் பன்னிரண்டு. இவற்றை 'ஜோதிலிங்க சேத்திரம்' எனக் குறிப்பிடுகிறார்கள். இவற்றில் இமாலய மலையில் அமைந்துள்ள கேதாரீஸ்வரம், மாளவத்தில் விஸ்லேஸ்வரம், சௌராஸ்டிரத்தில் சோமநாதர், மத்தியப் பிரதேசத்தில் உஜ்ஜயினி மாகேஸ்வரம், தென்னாட்டில் இராமேஸ்வரம் முதலியன முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன.

கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், பௌத்தர்கள் போன்றவர்களின் மத வழிபாடுகளில் வெளிப்படையாக சிவலிங்க வழிபாடு இருப்பது தெரியாது போனாலும் வரலாற்று ஆதாரங்களில் இருந்து ஆதியில் அவர்களிடம் லிங்க வழிபாடு சிறப்புற்றிருந்தது புலனாகிறது.

உலகெங்கிலுமுள்ள இஸ்லாமியர்களின் புனித சேத்திரமான மெக்காவில் உள்ள ஆலயத்தில் 'சங்-கே-அஸ்வத்' என்ற பெயரில் ஒரு சிவலிங்கம் இருக்கிறது. மிகச் சிறப்பான முக்கியத்துவம் கொடுத்து இவ்வடிவை இஸ்லாமியர்கள் வழி படுகிறார்கள். பண்டைய ரோமானிய தேசத்தில் சிவலிங்க வழிபாடு இருந்ததற் கான அடையாளங்கள் இப்போதும் தென் படுகின்றன.

ஜப்பானிலுள்ள புத்த மதத்தினர், யோக சாதனைக்கு சிவலிங்க வடிவத்தின் முன் மண்டியிட்டு வணங்குகின்றனர். மனதை ஒருநிலைப்படுத்த இந்த லிங்கத்தை உற்று நோக்கி அமர்ந்திருப்பது அவர்கள் வழக்கம்.

இஸ்ரவேல் மற்றும் யூதர்களின் மற்ற தேசங்களான ஈஜிப்ட் போனோஷ்ய நகரத்தில் ஈரான், யுனான், ஸ்பெயின், ஜேர்மனி, ஸ்காண்டிநேவியா மற்றும் அமெரிக்கா தேசங்களிலும், மெக்சிக்கோ, சுமாத்திரா, ஜாவா போன்ற இடங்களிலும் சிவலிங்க வழிபாடு இருந்ததற்கான அடையாளங்கள் இப்போதும் தென்படுகின்றன.

ஈழத்திருநாட்டில் நான்கு திசைகளிலும் கடற்கரை ஓரமாக நான்கு சிவத்தலங்கள் காணப்படுகின்றன. அவை திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரம், காலியில் உள்ள சிவன் கோயில், சிலாபத்திலுள்ள முனீஸ்வரம், மாதோட்டத்தில் உள்ள திருக்கேதீஸ்வரம். இவற்றில் இரண்டு நாயன்மாரினால் தேவாரம் பாடப்பட்ட தலங்கள். திருக்கோணேஸ் வரத்தில் திருஞானசம்பந்தரும், திருக்கேதீஸ்வரத்தில் திருஞான சம்பந்தருடன் சுந்தரரும் தேவாரம் பாடியுள்ளனர். இக் கோயில்களின் மூலஸ்தானத்தில் சிவலிங்கப் பெருமான் காட்சி அளிக்கிறார். திருக்கேதீஸ் வரத்தில் வரலாற்றுக்கு மேற்பட்ட சிவலிங்கம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

எனவே உலகில் எல்லா நாடுகளிலும், எல்லா இனத்தவர்களும் சிவலிங்கத்தை வெவ்வேறு பெயர்களில் வழிபட்டு வந்தார்கள் என்பது புலனாகும்.

-எஸ். எஸ். தியாகராஜா
சிவபூமி முதியோர் இல்லம்,
தொல்புரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாதம் 25ஆம் திகதி ஜெனன நூறாவது ஆண்டு

ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி முத்தையா

மூ.சிவலிங்கம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மத்தியில் செம்மண் இயற்கையாகவே வளம் கொழிக்கும் விவசாயப் பெருநிலப்பரப்பில் அமைந்த முக்கனிச் சோலைகளும், இதன் நடுவே ஏழு பிரதான அருள்மிகு ஆலயங்களும் சூழவுள்ள திருப்பதி ஏழாலை என்னும் சிவப்பதியாக அமைந்துள்ளது. இக் கிராமத்தின் சிற்றூர் இலந்தை மரங்கள் பெருகிய இலந்தைகட்டி என அழைக்கப் படுகிறது. இங்கு அருள் பாலிப்பவர் இலந்தைகட்டி பாதாளபைரவர். இப்புதுமையான பைரவரின் மீளா அடியவரும் பெருமதிப்பும் சிறப்பும் மிக்க பரம்பரை விவசாயக் குடும்பத்தில் தோன்றியவருமான நாகமணி என்பவருக்கும் அவர்தம் இல்லத்தரசி பொன்னுப் பிள்ளை அம்மையாருக்கும் சற்புத்திரராக 25.05.1918 அன்று அவதரித்தவர் முத்தையா என்னும் தவ முடையான்.

இவர் பிறக்கும்போது முத்தான கொள்ளை அழகுடன் காணப்பட்டதால் முத்தையா எனத் திருநாமஞ் சூட்டப்பட்டார். இவரின் பெற்றோர் இவரை நன்கு பேணி அரவணைத்து மகிழ்ந்தனர். பேரனார் சிறுவயதிலிருந்தே தமது குடிப்பிறப்பின் இயல்பான ஆன்மீக சிந்தனையை முத்தையாவிடம் மெல்ல மெல்லப் புகுத்தி எதிர்கால அறநெறி வாழ்வின் வித்தை இவரின் சிந்தனையில் ஆழப் பதித்திருந்தார். பேரனாரின் நல்லுபதேசங்களும் குலதெய்வமான பாதாள ஞானபைரவரின் பிரார்த்தனையும் பச்சிளம் பாலகனான முத்தையாவின் நல்வாழ்வுக்கு அடிகோலியது.

கல்விப்பருவம்

முத்தையாவின் ஆரம்பக்கல்வி ஏழாலை கத்தோலிக்க பாடசாலையில் ஐந்தாம் வகுப்புவரை தொடர்ந்தது. ஆறாம் வகுப்பு முதல் மயிலணி சைவப் பாடசாலையில் சிறப்புடன் கற்று வந்தார். இங்கு கற்பித்த நல்லாசிரியர்களின் நற்சேவையால் இவர் சைவத்தையும் தமிழையும் மிக ஆர்வத்துடன் மிக ஆழமாகப் படித்தார். இக்காலத்தில் யோக சுவாமிகளின் ஆசீர்வாதத்துடன் சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் என்னும் சிவநெறியாளரின் அருள் நோக்கும் நட்பும் கிடைத்தது. இதன்பேறாக இவர் திருநெல்வேலி முத்துத்தம்பி சாதனா பாடசாலையிற் சேர்ந்து படிக்கும் பேறு பெற்றார். இங்கு ஒருவருடம் ஆசிரியர் தராதரப் பத்திர படிப்பை மேற்கொண்டார். இக்காலத்தில் நாவலர் பெருமானின் பெறாமகன் த.கயிலாச பிள்ளையிடம் சமய பாடத்தை முறையாகக் கற்றதனால் இவர் சைவ சமயத்தில் நன்கு பிரகாசம் அடையும் நற்பேற்றினையும் தமதாக்கிக் கொண்டார். இச்சமய காலத்தில் யாழ். வேதாந்த மடம் என அழைக்கப் படும் சிவகுரு நாத பீடக் குரு மகான் மகாதேவ சுவாமிகளின் நட்பான தொடர்பு கிடைத்ததால் முத்தையாவுக்கு ஆத்மஞானம் பிரகாசிக்கத் தொடங்கியது.

இவர் 1937இல் திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக்கு தேர்வானார். இப்பயிற்சிக் கலாசாலையில் படித்த காலத்தில் பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் நேரடிக் கண்காணிப்பில் இணைந்தார். பண்டித மணியிடம் பயிலவரும் மாணவர்கள் தமிழ், சிவநெறி, ஒழுக்கம், பண்பாடு போன்றவற்றில் சிறப்புடன் காணப்பட்டனர். இவ்வாறு பண்டிதமணியின் சிறப்பான உபதேசத்தினால் முத்தையா சைவமும் தமிழும் நற்பண்பும் கூடிய ஆன்மீகவாதியாக விளங்கினார்.

ஆசிரியர் பணி

ஆசிரியர் பயிற்சிக் காலத்திற் சித்தி எய்தியதும் இறையருள் கவர்ந்திழுக்க ஆசிரியர் பணி காரணமாக மலையகஞ் சென்றடைந்தார். நாவலப்பிட்டியில் ஏழைத் தொழிலாளராக வாழ்ந்த மக்கள் ஏனைய இடங்களுடன் ஒப்பிடும் போது கல்வி, சமயம், பொருளாதாரம் ஆகியவற்றில் பின்தங்கிய நிலையில் இருந்தனர். இவர்களின் மீது பரிவு காட்டி யாவற்றிலும் முன்னேற இறையருள் கிட்டியது. இதன்பேறாக மலையகம் வந்த முத்தையா நாவலப்பிட்டி சென்.யோன்ஸ் வித்தியாசாலையில் ஆசிரியப்பணியை ஏற்றார். இப்பாடசாலையில் 1939 ஆம் ஆண்டு தொடக்கம் 1948ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

இதே ஆண்டு இவர் நாவலப்பிட்டி கதிரேசன் குமார வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றார். 1960இல் அதிபரானார். இக்காலத்தில் எல்லாப் பாடசாலைகளும் அரசுடமையாக மாறியதும் பாடசாலைகளிற் கல்வித்தரம் வீழ்ச்சியுற்றது. வசதி படைத்த மாணவர்கள் பாடசாலைக் கல்வியுடன் பெருந்தொகைப்பணம் கொடுத்து தனியார் கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களிற் கல்வி பயின்றனர். நாவலப்பிட்டி கதிரேசன் குமார வித்தியாசாலை மாணவர்கள் யாவரும் வசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். எனவே அவர்களால் ஏனைய வசதியுடைய பிள்ளைகளின் தரத்தை எட்ட வேண்டுமென அதிபர் சிந்தித்தார். இதன்பேறாக பாடசாலைப் படிப்பு முடிந்த பின் மாலை நேரங்களில் பிள்ளைகளுக்கு இலவசமாக மேலதிகக் கல்வி போதித்து யாவரையும் பயனடையச் செய்தார்.

மாணவர்களின் ஒழுக்கம், பண்பாடு, தவறுகள், ஒழுங்கற்ற பாடசாலை வரவு யாவற்றையும் ஏனைய ஆசிரியர் கடுஞ் சொற்களாலும் பிரம்பினாலும் திருத்த முற்படுவர். ஒரு மாணவனைக் கண்டித்தோ தண்டித்தோ பயனேதும் பெறமுடியாதென உணர்ந்தார். இதனால் அப்படியான தவறுகள் செய்யும் மாணவர்களை நன்கு அரவணைத்து அவர்களின் உட்கருத்தை அறிந்து அன்பினால் நல்வழிப்படுத்துவார். அவரின் நெகிழ்ந்த உள்ளம், கருணையுள்ள பார்வை, நல்லாசிரியருக்கான நற்பண்பு ஆகியவற்றினால் மாணவனை நன் மாணவனாக மாற்ற எண்ணினார். இன்சொற் பேசி அரவணைத்து முன் செய்த பிழைகளை மீண்டும் செய்யாது தவறின்றி ஒழுகுமாறு நல்லுரை வழங்குவார். இதனால் மாணவ சமுதாயம் அதிபரை நன்கு மதித்துத் தமது குடும்ப உறவினர் போலப் பழகினர். இதனால் அதிபர் கற்பித்தலில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். யாவருமே அவரின் சிறந்த குணங்களையும் அடுத்தவரை அன்பினால் வசீகரிக்கும் பெருந்தன்மையையும் பாராட்டினர்.

இவர் அதிபராக இருந்த காலத்தில் பணியாற்றும் ஆசிரியரின் ஒழுக்கம், பண்பாடு, ஒழுங்கற்சேவை, நேரம் தவறிய பாடசாலை வரவு, கற்பிப்பதில் கவனக்குறைவு போன்ற பல சீர்கேடுகளை உரியவர்களுடன் சமரசமாகவும் இதமாகவும் பேசி அவர்களை நல்வழிப்படுத்தினார். இதனால் அவர்கள் தமக்கு வர இருந்த மேலிடத்து ஒழுக்காற்று நடவடிக்கையிலிருந்து தவறவும் உதவியது. யாவரும் கடமையுணர்வுடன் பணியாற்றி நல்லாசிரியர்களாக மாறவும் ஏதுவானது.

1942இல் ஆசிரியர் சங்கத்தில் நிர்வாக உறுப்பினராகி அருஞ்சேவையாற்றினார். தமது பணிச் சிறப்பினால் மத்திய மாகாண ஆசிரிய சங்கத்தினரால் நன்கு மதிப்பான உயர்பதவி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அகில இலங்கை ஆசிரியர் சங்கத்திலும் பணியாற்றினார்.

நாவலப்பிட்டியில் நல்லாசிரியராக, அதிபராக, தொழிற்சங்க நிர்வாக உறுப்பினராகவும் வாழ்வாதாரம் நோக்கிப் பணியாற்றிய போதும் இவரின் உடல் இயங்கிய காலந்தொட்டு அடிப்படையாக அமைந்த ஆன்மீக சிந்தனையும் நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம் என்ற ஔவையாரின் கூற்றுக்கிணங்கத் தம்மைச் சமய சமூகத் தொண்டில் இணைத்தமை இறைவன் திருவருளேயாகும். இவரது தூய வாழ்வுக்கும் தூய சிந்தனைக்கும் இட்டமுடன் இவரது தலையில் இன்னபடி என்றெழுதி விட்ட சிவனின் செயலல்லவா? இது சிவனின் திருவிளையாடலின் ஒரு அம்சம் என விளங்கியது.

சமயப்பணியும் சமூகப்பணியும்

ஆசிரியர் பணியின்போது நாவலப்பிட்டி வாழ் மக்கள் பொருளாதார வளம் குறைந்தும், சைவ சிந்தனை குன்றியும், பல்வேறு குடும்பப் பிரச்சினைகளில் மூழ்கியும் துன்புற்று வாழ்ந்ததை உணர்ந்தார். தம்மிடம் கற்கும் மாணவர்களின் பிஞ்சு உள்ளக் குமுறல்களை அடிப்படை அறிவாக ஏற்று இச்சமூகத்துக்கு நல்லுதவி செய்ய எண்ணினார். மாணவர்கள் மூலம் இப்பிரச்சினைக்கு உரியவர்களை அணுகி உரையாடினார். அதன் பேறாக மாணவர்களின் சிறப்பான எதிர்கால நன்மை கருதி உரியவர்களுக்கு நல்லுபதேசஞ் செய்தார்.

தமிழ் மக்களின் அவல நிலையை உணர்ந்து எதிர்காலத்தில் யாவரும் சிறப்பாக வாழ வேண்டிய காரணமாக வீண் பிரச்சினைகளை நாடாது யாவரும் தம்மையே அர்ப்பணித்து வாழ வேண்டும் என அறிவூட்டினார். இறை உணர்வும் கடின உழைப்பும் கூடிய மக்கள் வீண்பிரச்சினைகளை நாடாது அறவழிக்குச் செல்லவும் வற்புறுத்தினார். இதனை நன்கு சிந்தித்த மக்கள் ஆசிரியரின் மகத்தான சேவையையும் நல்லுபதேசத்தையும் ஏற்று அமைதியடைந்தனர். இங்கு சமயநெறியும் சமரசமும் மேலோங்கியது. யாவரும் தம்மிடையே ஆசிரியரின் நல்வழியை நிலைக்கச் செய்தனர்.

மக்கள் சேவை மகேசன் சேவை என உணர்ந்ததால் மக்களிடையே உள்ள மதுப்பழக்கம், களியாட்டம், வீண்சண்டையிடுதல் போன்றவற்றை நீக்கி அவர்களை நெறிப்படுத்த முன்வந்தார். வறுமை காரணமாக மக்கள் மதம் மாறுவதை நீக்கவும் முற்பட்டார். மாணவர்களிடையே நல்ல எதிர்காலச் சிறப்பை உணர்த்தி அவர்கள் மூலம் தோட்டங்கள் தோறும் இந்து வாலிபர் சங்கத்தை நிறுவி நாவலப்பிட்டியில் தாய்ச்சங்கம் செயற்பட உதவினார். இச்சங்கங்கள் மூலம் அவ்வப்பகுதியில் சமய விழாக்களை ஏற்படுத்தினார். இதனால் மக்களிடையே ஒற்றுமையும், சமய உணர்வும் சமூக அபிவிருத்தியும் வாழ்க்கைச் சிறப்பும் பிரகாசித்தன.

ஒரு பாடசாலை ஆசிரியர், கல்விமான், நற்பண்பாளர், சமயநெறியாளர் தமக்கென நாடாது பொது மக்களுக்காகவே அருஞ்சேவை ஆற்று கின்றாரென யாவரும் உணர்ந்து அவர் மீது நம்பிக்கையும் பெருமதிப்பும் வைத்துப் பணிந்து அவரின் ஆணைப்படி ஒழுகி வாழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மஜோதி சஞ்சிகை

இவரின் அடுத்த பணியாக நாவலப்பிட்டியில் "ஆத்மஜோதி" என்னும் சஞ்சிகையை 1948இல் ஆரம்பித்தார். இவ்விதழ், ஆசிரியரின் ஆன்மீகக் கருத்துக்களையும் இதயத்தைத் தொடும் உள்ளார்ந்த மான செய்திகளையும் சைவப் பெரியவர்களின் சமயக் கருத்துக்களையும் உள்ளடக்கியதான சைவசமய பிரசார நூலாக அமைந்தது. கறைபிடித்து இருள் சூழ்ந்து இதயங்களின் உண்மையான ஆன்மீக உணர்வென்றும் விளக்கேற்றிய இதயத்தைச் சோதிமயமாக்கும் ஒளிப்பிளம்பாகவே அமைந்தது. இவரின் நற்பணிக்கு நயினாதீவைச் சேர்ந்த ஆத்மசீலர் சு.இராமச்சந்திரா இவ்விதழ் வெளிவரக் காரணமாக இருந்து சிறப்பித்தார். சமய சீலர்களின் மேலதிக ஒத்துழைப்பால் இச்சஞ்சிகை வெற்றிநடை போட்டு மிகச் சிறப்பாகவும், ஆசிரியரின் சமய சமூக தன்னலமற்ற பொதுச்சேவையின் சின்னமாகவும் அமைந்தது. இதனால் இவர் "ஆத்ம ஜோதி முத்தையா" என்றே அழைக்கப்பட்டார்.

இவர் இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, சுவிற்சலாந்து போன்ற வெளி நாடுகளிலும், யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, கொழும்பு போன்ற பல இடங்களுக்கும் சென்று சமயச் சொற்பொழிவுகள், கூட்டுப் பிரார்த்தனை, பசனை, தியானம் போன்ற பல நிகழ்வுகளையும் விரிவு படுத்தினார். மக்களும் மனம் மகிழ்ந்து உள்ளன்புடன் இறைசிந்தனையை அனுசரித்து மகிழ்ந்தனர்.

இவர் சைவசமய மேலீட்டினால் பாத யாத்திரைகள் மூலம் சிவப்பணியை மேற் கொண்டார். தமது மக்களனைவரும் நலமுடன் நற்பணியை நாடவேண்டுமென எண்ணினார். இம்மண்ணிலுள்ள பெரிய சிறிய ஆலயங்களுக்கெல்லாம் தம் பக்தர்களுடன் இறை நாமங்களையும் துதிப்பாடல்கள், திரு முறைகளையும் ஓதிய வண்ணம் ஆசாரசீலர்களாக ஆன்மீகப் பவனி செய்கின்றனர். உணவு வேளை அன்பர்களின் வேண்டுதலில் குறிப்பிட்ட கோயில்களிற் தங்கிக் கூட்டுப்பிரார்த்தனை சொற்பொழிவு ஆற்றி இறையருளை மெச்சிய பின் அவ்விடங்களிற் பசியாறி பாதயாத்திரை தொடரும்.

அன்று சமயகுரவர்கள் வாழ்ந்து காட்டிய திருத்தலங்கள் தோறும் பவனி வந்து நிகழ்த்திய அருஞ்சேவையை ஒட்டியே இவரது பணியும் எமக்கு ஞாபகமூட்டுகின்றது. இப்பணிமூலம் இவர் சமயப் பணிக்குப் பல புதிய எழுச்சி முறையையும் செயற்படுத்தினார்.

இவ்வாறு பல சிவப்பணிகளை முன்னெடுத்தும் தமது கற்ற கல்வியின் சிறப்பும் சிந்தையிற் குடிகொண்ட ஆன்மீகச் சிந்தனையும் உந்திச் செல்ல பல சமய நூல்களை வெளியிட்டார். இவர் எழுதிய பதினைந்து நூல்களில் தத்துவக் கதைகள், ஏழாலை, ஈழத்துச் சித்தர்கள், கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் ஆகிய நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப்பரிசு பெற்றவையாகும். எழுத்தாற்றலுடன் சமய தத்துவங்கள், ஒழுக்கம், நன்நெறி, சமூகச் சீர்திருத்தம், தமிழ்மொழி, தருமம், தமிழர் பண்பாடு போன்ற அரிய தலைப்பில் திறமான சொற்பொழிவுகள் நடாத்தியும் மக்களைத் தம்மால் ஈர்த்துச் சமயநெறியை வலுப்படுத்தினார்.

இவர் தமது சமய அறிவு முதிர்ச்சியால் 1948இல் திருவண்ணாமலையில் நடைபெற்ற அருணகிரிநாதர் விழாவில் திருமுருக கிருபானந்த வாரியார், கி. வா.ஜகந்நாதன் போன்ற பெரியவர்கள் வீற்றிருந்த சபையில் யாழ்ப்பாணத் தமிழில் ஒரு திருப்புகழ் பாடி விளக்கங் கூறினார். இதனால் கிருபானந்த வாரியாரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

1954 இல் புத்தகாயாவில் விநோபாவே நடாத்திய சர்வோதய மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகச் சென்று உரையாற்றினார். 1965இல் செட்டிநாட்டாங் கோட்டையில் சா.கணேசன் ஏற்பாடு செய்த கம்பன் விழாவிலும் உரையாற்றினார்.

1979 இல் மகான் சங்கராச்சாரியார் நடாத்திய அகில உலக இந்து சமய மகாநாட்டில் இலங்கையர் குழுவின் தலைவராக அமைந்து சிறப்புரை நிகழ்த்தினார். இவ்வாறு மலேசியா மற்றும் சில நாடுகளின் அழைப்பை ஏற்று அங்கெல்லாம் சென்று சொற்பொழிவாற்றி எம் நாட்டுக்கு பெருமை தேடினார்.

1992இல் இந்து சமயப் பேரவை என்ற சமயப் பணியாற்றும் நிறுவனம் யாழ். நல்லூரில் நிறுவப்பட்டு முத்தையாவைத் தலைவராகக் கொண்டு இயங்கியது. இந்த நிறுவனம் அறுபது அநாதைப் பிள்ளைகளைப் பொறுப்பேற்று நடாத்தியது. இவர் ஒரு பிரமச்சாரி. ஆனால் தமது 74ஆம் வயதில் அறுபது பிள்ளைகளைத் தந்தை போல வழிநடத்திப் பராமரித்து வந்தார். இத்தேவை கருதி உள்ளூரிலும் வெளிநாட்டிலும் நிதியும் பொருளும் சேகரிக்க எண்ணினார். தமது தெளிந்த தூய சிந்தனையில் வஞ்சனையில்லாத நெஞ்சிற் கறைபடியாத அறுபது பிஞ்சுப்பாலகர்களுக்காகவே அரும்பாடு பட்டார். இதனால் எம் தமிழர் வாழும் தேசங்களுக்கெல்லாம் சென்று தமது கல்வியறிவு சிவசிந்தனை, ஆற்றல், யோகநிலை யாவற்றையும் வெளிப்படுத்தியும் சமயச் சொற்பொழிவு கூட்டுப் பிரார்த்தனை போன்ற பணியால் அறச்செயலுக்கு உதவி கோரினார். வெற்றியும் கண்டார்.

ஆறுமுகநாவலரின் பணிகளை அடியொற்றி பல்லாண்டுகள் சிவப்பணியாற்றினார். பிறப்பால் பெருங்குடி மகன், புகழ் தேடிய அறக்கல்வியாளன். பண்பாலும் மக்கள் சேவையாலும் சான்றோன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவரை நேசிப்பதில், அரவணைப்பதில், வழிநடத்துவதில், பல்வகையிலும் உதவுதலிலும் அன்புடையோன். சமயநெறி மேலோங்கவும் மக்கள் தூயசைவ நெறியைக் காதலாற் கசிந்து கண்ணீர் மல்கி உள்ளன்புடன் மனிதநேயத்தையும் தன்னைத்தானே அறியும்படி உபதேசித்தும், பிரார்த்தனை செய்தும் பாதயாத்திரை சென்று தன்னுள்ளே இருக்கும் சிவனுக்கு அண்டமெல்லாம் வியாபித்திருக்கும் சிவதரிசனம் காட்டியும் அனாதைக் குழந்தைகளை ஆதரிக்க யாவரிடமும் அறநெறி மூலம் இரந்தும் யாவரையும் வழி நடத்திய சிவநேயச் செல்வனுமாவார்.

தமது பிறப்பின் பலனாக ஆன்மலாபம் கருதி தூய பணியாற்ற இல்லறம் நாடாது சொல்லறம் பேணி உள்ளும் புறமும் தூயனவாய் ஆசாரசீலனாய் அறம்பல புரிந்து மறுமைக்கு இன்பம் தேடிய ஜீவாத்மா 08.09.1995 அன்று பரமாத்மாவுடன் சங்கமமானது.

இவரது அளப்பரிய சேவையை உணர்ந்து அதன் நன்றிக் கடனாக அன்பு உள்ளங்கள் அவரின் பிறந்த மண்ணில் ஓர் அழகிய நினைவுச்சின்னமாக மணிமண்டபத்தை அமைத்தனர். இப்படித்தான் வாழவேண்டுமென வாழ்ந்து காட்டிய பூத உடலை ஒத்த தெய்வச் சிலையையும் நிறுவி நன்றி செலுத்திய நன்னாள் 25.02.2002 ஆகும்.

அறம்பல செய்த மறத்தமிழனின் பெற்றோர் இட்ட பெயர் முத்தையா. சைவத்தின் பெருமையை உலகறியச் செய்ய எழுத்தில் பாரம்பரியத்தால் இட்ட பெயர் "ஆத்மஜோதி" இவரது பெயருடன் ஒட்டியதால் ஆத்மஜோதி முத்தையா ஆனது. கல்வியூட்டிய குருவே இவரது ஆன்மீக நடையறிந்து ஆத்மீக வள்ளலென்றார். சமய ஒளி நாட்டச் சென்றவர்க்கு வெளிநாட்டில் கிடைத்த பெயரே "ஞானசுரபி".

பட்டங்கள் கிடைத்தாலும் நிலைத்ததில்லை. உடலும் அவ்வாறே. பிறந்தவர் அடுத்த நிமிடமே இறப்பது உறுதி, இது நியதி. இதையுணர்ந்து தீயன கழிந்து நல்லன தேடிக்கற்று நல்லோர் வகுத்த அறங்கள் நாலெட்டில் நாநிலம் போற்றும் நல்லனவற்றையேனும் நல்கி மறுமையின் சுகம் தேடி நல்லறமாக அறநெறி தழுவி ஆடலே புரியும் அம்பலவாணரை அல்லும் பகலும் அனுசரிப்போமாக!

(நன்றி : யாழ் மண்ணில் சைவமும் தமிழும் வளர்த்த சான்றோர்கள்)

தொடர்கிறது மதமாற்றம் ! சைவ அபிமானிகள் அதிர்ச்சி !

கடந்த காலங்களில் மதமாற்றம் அவ்வப்போது இடம்பெற்று வந்தாலும். போர்க் காலத்தின் போது சைவ மக்களின் ஏழ்மையைப் பயன்படுத்தி என்றும் இல்லாதவாறு பிறமதத்தினர் அவர்களை மதம் மாற்றத் தொடங்கினர். யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் கடந்த முப்பது ஆண்டுகளுக்குள் சில மதக் குழுக்கள் பலரை மதம் மாறச் செய்திருப்பது குறித்து பல சைவ நிறுவனங்கள் கவலை தெரிவித்து வந்துள்ளன.

இப்போது கிழக்கிலங்கையில் மக்களை மதம் மாற்றுவது மட்டுமன்றி, பத்திரிகைகள் ஊடாக அவர்களின் சொந்தப் பெயரையும் மாற்றுவித்து அறிவிக்கும் பரிதாபமும் தொடர்கிறது. இந்நிலை தொடர்பாக, சைவ மக்கள் விழிப்பாக செயற்பட வேண்டும் என சைவப் பெரியார்களும், சைவ சமய நிறுவனங்களும் கருத்து வெளியிட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

சைவ மக்கள் பிறமதம் சார்ந்தவர்களை மதமாற்றம் செய்யும் முயற்சியில் என்றுமே ஈடுபட்டிருக்கவில்லை. ஆனால், சமீப காலத்தில் சைவமக்களை சந்தர்ப்பம் பார்த்து மதம் மாற்றுவிக்கும் சில பிறமத நிறுவனங்களின் செயலானது மக்களை அதிர்ச்சி யடையச் செய்துள்ளது. இப்போது மலையகத்திலும் மதம் மாற்றும் முயற்சிகள் தீவிரமாக இடம்பெறுவதாக அறியமுடிகிறது.

முதலமைச்சர் விருது – 2017

வடமாகாணத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் விருது பெற்ற கலைஞர்கள். இவர்களுக்கான விருது வழங்கும் வைபவம் கடந்த மாதம் நடைபெற்றது.

லண்டன் சைவமாநாட்டில் நல்லை ஆதீன முதல்வர்

பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றி யத்தின் 19ஆவது சைவமாநாடு இம்மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் லண்டனில் நடைபெற்றது. இந்த சைவமாநாட்டில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன முதல்வர் சற்குரு வேலன் சுவாமிகளும் கலந்து கொண்டு ஆசியுரைகளை வழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் நிறைந்தவர்கள்

அமரர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள்

கவிஞர் த.துரைசிங்கம்

இம்மாதம் 8ஆம் திகதி பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களது 94ஆவது பிறந்ததினமாகும். இவர் 22.01.1989 இல் காலமானார்.

தமிழியற் பணியினைத் தம் இலட்சியமாகக் கொண்டு பணியாற்றிய பெருந்தகைப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆவார். பேராசிரியர்கள், நிர்வாகிகள், எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள் எனப் பல்வேறுபட்டவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். பேராசிரியராக, யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தராக, தமிழாராய்ச் சியாளராக வியங்கியதோடு மட்டுமன்றித் தலைசிறந்த மனிதாபிமானியாகவும் விளங்கியவர். மாணவர்தம் உளங்கவர்ந்த ஆசானாகத் திகழ்ந்த இப் பேராசிரியரின் தமிழ்ப்பணிகள் என்றும் நினைவு கூரத்தக்கன.

யாழ்.மாவட்டத்தின் தெல்லிப்பழையில் உள்ள வீமன்காமம் என்னும் ஊரில் சுப்பிரமணியம் - முத்தம்மா தம்பதியினரின் இரண்டாவது மகனாக 08.05.1924இல் பிறந்த வித்தியானந்தன் தமது ஆரம்பக் கல்வியை வீமன்காமம் தமிழ்ப் பாடசாலையில் கற்றார். இடைநிலைக் கல்வியைத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பெற்றார். பின்னர் யாழ். பரி.யோவான் கல்லூரியிலும், யாழ். இந்துக் கல்லூரியிலும் உயர் கல்வியைக் கற்று இலங்கைப் பல்கலைக்கழகம் (1941 இல்) புகுந்தார். அங்கு தமிழ், இலத்தீன், வரலாறு ஆகிய பாடங்களைப் பயின்று தமது இருபதாவது வயதிலேயே (1944) தமிழ்ச் சிறப்புப் பட்டதாரி ஆனார். 1946 இல் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பயின்றபோது பேராசிரியர்களான சுவாமி விபுலானந்தர், க. கணபதிப்பிள்ளை, வி.செல்வ நாயகம் ஆகியோரிடம் தமிழ் கற்கும் வாய்ப்பினைப் பெற்றார். 1948 இல் இலண்டன் பல்கலைக்கழகக் கீழைத்தேயக் கல்லூரியிலே "பத்துப்பாட்டு - வரலாற்று சமூக மொழியியல் நோக்கு" என்னும் விடயம் குறித்து கலாநிதிப் பட்ட ஆய்வினை மேற்கொண்டார். கலாநிதிப் பட்டம் பெற்ற பின் இலங்கை திரும்பினார்.

1946 ஆம் ஆண்டு பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராகவும், 1970ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகவும் பணியாற்றிய கலாநிதி வித்தியானந்தன் 1977 இல் இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராகவும், 1978 இல் யாழ்.பல்கலைக் கழகத்தின் முதலாவது துணைவேந்தராகவும் பதவியேற்றார்.

பேராசிரியர் வித்தியானந்தன் தமிழ் மொழி, தமிழர்தம் பண்பாடு, கலை, இலக்கியத்துறைகளில் மிக்க ஆர்வம் கொண்டவர். பதினைந்துக்கு மேற்பட்ட நூல்களையும், ஐம்பதுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டு ரைகளையும் அவர் எழுதி யுள்ளார். 1953 இல் இவர் வெளி யிட்ட "இலக்கியத் தென்றல்' என்னும் நூல் இவரது புலமைத் திறனை வெளிக்காட்டியது. 1955 இல் இவரது இரண்டாவது நூலான "தமிழர் சால்பு" வெளிவந்தது. இந்நூல் பல பேராசிரியர்களின் பாராட்டுதலுக்குள்ளானது. பேராசிரியரின் தமிழ் இலக்கிய ஆய்வுச்சிறப்பினை, தமிழர் தம் வாழ்வியலை இலகுவான நடையில் எடுத்துக் கூறும் நூலாக இந்நூல் அமைந்தது. ஈழத் தமிழர் தம் முதுசொத்தான நாட்டார் பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதிலும் நாட்டுக் கூத்துக்களைத் தற்கால நெறிமுறைக்கேற்ப அரங்கேற்றுவதிலும் பேராசிரியர் ஆற்றிய பணிகள் அளப்பரியனவாகும். நாட்டார் வழக்காற்றியல் அழிந்திடாது புத்துயிர் பெறுதற்கு இவரது பங்களிப்பே பெரிதும் உதவியது எனலாம். கிராமியக் கூத்துக்களை நகரத்தாரும் அறிந்திடவும் பார்த்து இரசித்திடவும் வழியமைத்தமை இவரது சீரிய பணியெனலாம். பேராசிரியரின் பெரு முயற்சியினாலேயே மட்டக் களப்பு நாட்டுப் பாடல்கள், மன்னார் நாட்டுப் பாடல்கள் என்பன தொகுக்கப்பட்டு நூல்களாக வெளியிடப்பட்டன.

நாட்டுக்கூத்துக்களை அழிந்திடாது பேணிக் காத்தும், பழக்கியும் வந்த அண்ணாவிமார்களை வெளியுலகு அறிந்திடும் வகையில் அவர்களைக் கௌரவித்து மேன்மைப்படுத்தினார். அச்சேறாது ஏட்டளவில் இருந்த கூத்துப் பிரதிகளைத் தேடிப்பெற்று அவற்றை நூல்கள் வடிவில் அச்சேற்றி வெளியிடக் காரணராகத் திகழ்ந்தார். இவரது பெரு முயற்சியினாலேயே அலங்காரரூபன் நாடகம், எண்டிறீக்கு எம்பரதோர் நாடகம், மூவிராசாக்கள் நாடகம், ஞானசௌந்தரி நாடகம் என்பன நூல் வடிவம் பெற்றன.

பல்லைக்கழகத்தில் பதினாறு நாடகங்களைத் தயாரித்த பெருமையும் இவரையே சாரும். நாட்டுக் கூத்துக்களை நவீன முறையில் தயாரித்து அரங்கேற்றிய சிறப்பும் இவருக்குண்டு. பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் அரங்கேற்றிய கர்ணன்போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலிவதை ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கூத்துக்கள் பார்த்தோர் அனைவரதும் பாராட்டுதல்களைப் பெற்றன. அவற்றை மிகச் சிறந்த முறையில் அரங்கேற்றிய பெருமை பேராசிரியரையே சாரும்.

இலங்கைக் கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழுவினதும் இலங்கை சாகித்திய மண்டலத்தின் தமிழ்க்குழுவினதும் தலைவராக இவர் பணியாற்றிய காலத்தில் தமிழ் நாடகக்கலையும் தமிழ் இலக்கியக் கலையும் புத்துயிர் பெற்றன எனலாம். கருத்தரங்குகள், கலைவிழாக்கள், நாடகங்கள் எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. இவையெல்லாம் பேராசிரியரின் கலை, இலக்கியப் பணிகளுக்குச் சான்றாக விளங்கின.

இஸ்லாமியர்களின் பண்பாட்டினையும் அவர்களது தமிழ் இலக்கியப் பணிகளையும் பேராசிரியர் என்றும் போற்றிவந்துள்ளார். அவற்றின் சிறப்பினை உணர்த்தும் வகையில் பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் மன்ற இதழில் (University Majilis) "இஸ்லாமியரும் தமிழும்", "இஸ்லாமியர் தமிழிற் பாடிய புதிய பிரபந்த வகைகள்", "இஸ்லாமிய நாடோடிப் பாடல்கள்", "இஸ்லாத்தின் திருத்தூதர் காட்டிய வழி", முதலான கட்டுரைகளை எழுதியுள்ளார். "பிறையன்பன்" என்னும் புனைபெயரில் இஸ்லாமியரின் கலை, இலக்கியப் பண்பாடுகளை ஆராய்ந்து இவர் எழுதிய நூல் "கலையும் பண்பும்" என்பதாகும். இந்நூல் இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதினையும் (1961) பெற்றது.

கிறிஸ்தவர்கள் தமிழுக்காற்றிய பணிகள் குறித்தும் பேராசிரியர் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றுள் பேராதனைத் தமிழ்ச் சங்க இதழான இளங்கதிரில் வெளியான "கிறிஸ்தவரும் ஈழத்திலே தமிழ் வளர்ச்சியும்" என்னும் கட்டுரையும் உடுவில் மகளிர் கல்லூரி இதழில் பிரசுரமான "அமெரிக்க மிசனும் தமிழர் கல்வியும்" என்னும் கட்டுரையும் குறிப்பிடத்தக்கனவாகும்.

மலேசியாவில் நடைபெற்ற முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டிலே பேராசிரியர் "ஈழத்து மிஷனரிமாரின் தமிழ்த் தொண்டு" என்னும் தலைப்பில் படித்த (ஆங்கில மொழியில்) ஆய்வுக் கட்டுரை மிஷனரிமாரின் தமிழ்ப் பணிகளை விரிவாக எடுத்துரைக்கும் வகையில் அமைந்து இருந்தமை குறிப்பிடத்தக்கனவாகும்.

உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டுழைத்த பேராசிரியர் வித்தியானந்தன் சிறந்த செயல்வீரர் என்பதை 1974 இல் யாழ்ப்பாணத்தில் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தியதன் மூலம் வெளிப்படுத்தினார்.

பல்வேறு தடைகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் மனந்தளராது இம் மாநாட்டினை அவர் சிறப்பாக நடத்தியமை பெரும் சாதனை என்றே கூறலாம். அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம் நடத்திய மாநாடுகள் அனைத்துக்கும் பேராசிரியரின் தமிழ்ப் பணிகள் விரிவானவை. அவை காலத்தால் மறக்க வொண்ணாச் சிறப்புக்குரியன.

மட்டக்களப்பிலும் (1977 இல்) முல்லைத்தீவிலும் (1983 இல்) இவர் முன்னின்று நடத்திய தமிழாராய்ச்சி மாநாடுகள் அவ்வப் பிரதேசங்களின் வரலாறு, சமூக, அரசியல், பொருளாதார, கலை, சமயம், பற்றிய பல்வேறு தரவுகளை அறிந்து கொள்ளவும் அவற்றை ஆவணப்படுத்தவும் வழிசமைத்தன. பேராசிரியர் தமிழியலுக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன. மரபுவழித் தமிழறிஞர்களையும் அவர்தம் ஆய்வுகளையும் பல்கலைக்கழகக் கலைத்திட்டத்தில் புகுத்தியமை, ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்கு ஊக்கமளித்தமை, நுண்கலை, நாடகம் சார்ந்த புதிய பாடநெறிகளைப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்தமை, பல்கலைக்கழகத்துக்கும் சமூகத்துக்குமிடையே நிலவிய பாரிய இடைவெளியை அகற்றியமை ஆகியன பேராசிரியரின் குறிப்பிடத்தக்க பணியாகும்.

பேராசிரியரின் "தமிழியற் சிந்தனைகள்", "நாடகம் நாட்டாரியல் சிந்தனைகள்" போன்ற நூல்கள் அவரது பணிகளை என்றும் நினைவூட்டும் எனலாம். எல்லாவற்றுக்கும் மேலாகப் பேராசிரியர் வித்தியானந்தன் சிறந்த மனிதாபிமானியாக விளங்கினார். நாற்பத்திரண்டு ஆண்டுகள் நல்லாசானாக விளங்கிய இவர் பல்லாயிரம் மாணவர்களை உருவாக்கிய பண்பாளராக மாணவர் மனதில் உயர்ந்து நிற்கின்றார். "பேராசிரியர் வித்தி" என்று மாணவர்களால் அன்புடன் அழைக்கும் பெருமைக்குரியவராகத் திகழ்கிறார். வேறெந்தப் பேராசிரியருக்கும் கிட்டாத இந்தப் பெருமை "வித்தி" அவர்களுக்கே உரித்தாகும். பேராசிரியரின் மனிதாபிமானச் செயற்பாடுகளே இதற்கு மூல காரணமாகும்.

தம் வாழ்நாளில் பெரும் பங்கைத் தமிழ்ப் பணிகளுக்கே அர்ப்பணித்த பேராசிரியர் வித்தியானந்தன் மறைந்தாலும் அவரது நாமம் என்றும் அவர்தம் பணிகள் மூலம் மாணவர் மனதில் நிலைத்திருக்குமென்பது திண்ணம்.

(நன்றி : ஈழத்துத் தமிழ் அறிஞர்கள்)

கனடாவில் வள்ளுவர் பெருமானுக்கு சிலை

கனடா டொரன்ரோ மாநகரில் உள்ள சிவன் ஆலய வளாகத்தில் திருவள்ளுவர் சிலையொன்று நிறுவப்பட்டுள்ளது. வள்ளுவர் பெருமானின் மேற்படி சிலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுமை எனும் பூங்காற்று

முதுமை என்பது ஒரு பருவமே. முதுமையே ஒரு நோயல்ல. ஆனால் முதுமைக் காலத்தில் பல நோய்கள் வர வாய்ப்புண்டு.

- முதுமைப் பருவம் என்பது நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல! ஒரு பக்கம் வயதின் முதிர்ச்சி, அனுபவம், அறிவு. மறுபக்கமோ தள்ளாமை, நோய்கள், தனிமை போன்றவை.
- முதுமையிலும் இளமையாக அதாவது ஆரோக்கியமாக இருக்க முடியுமா?
- முதுமையை தடுக்க முடியாது என்பது உறுதி. ஆனால் அதை ஆரோக்கியமாகத் தள்ளிப் போட்டு முதுமையிலும் இன்பமாக வாழலாம்.
- முதுமையின் இளமை ஐம்பது வயதில் ஆரம்பமாகிறது. இந்த வயதில் திட்டமிட்டு வாழ்க்கையை ஆரம்பித்தால், முதுமை ஒரு பொன்னான காலமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.
- தினமும் காலையில் இன்று தான் புதிதாகப் பிறந்தோம் என்ற எண்ணத்துடன் வாழ்க்கைப் படிகளை கடக்க ஆரம்பித்து விட்டால் முதுமையை எல்லோரும் வரவேற்று வாழ ஆசைப்படுவார்கள்.

வளமான முதுமையை அடைவது எப்படி என்று அறிய ஒரு மூத்த தம்பதிகள் முதியோரது மருத்துவரிடம் சில விளக்கங்களைக் கேட்டு அறிகிறார்கள். அதை நீங்களும் படித்துப் பயனடையுங்கள்.

பற்றற்ற வாழ்வு

வயது ஆக ஆக மனதளவில் பந்த பாசங்களை குறைத்துக் கொண்டு வாழ முயற்சிக்க வேண்டும். தாமரை இலை மேல் இருக்கும் தண்ணீரைப் போல வாழ கற்றுக் கொள்ள வேண்டும்.

தியானம் செய்தல்

சிதறி ஓடும் எண்ணங்களை ஒருநிலைப் படுத்துதல், தியானம், மன அமைதி, மனோபலம், சகிப்புத் தன்மை, எதையும் எதிர்நோக்கும் பாங்கு இவை அனைத்தும் தியானம் மூலம் கிடைக்கின்றன.

மௌன விரதம்

மௌனம் ஒரு உன்னதமான வழிபாட்டு முறையாகும். சுமார் 15 முதல் 30 நிமிடம் வரை மௌனத்தைக் கடைப்பிடித்து அதை நாளாக நாளாக சுமார் ஒரு மணி நேரம் நீடிப்பது நல்லது. முதுமையில் மன அமைதி பெற மௌனம் ஒரு சிறந்த சாதனம்.

உண்ணாவிரதம்

குறைந்த கலோரி சத்துள்ள உணவை தினமும் உட்கொண்டு வந்தால் நீண்ட நாட்கள் வாழலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. குறைந்தது வாரத்துக்கு ஒரு வேளையாவது விரதம் இருப்பது நல்லது. உண்ணாவிரதம் புதிய சக்தியையும், வலிமையையும் சுறுசுறுப்பையும் தரும்.

இளமையோடு இருக்க பிராணயானம்

பிராணயானம் மூலம் ஐம்புலன்களை அடக்கும் சக்தியையும், நீண்ட ஆயுளும் கிட்டும்.

தொண்டு

தொண்டு என்பது உடலால் மட்டும் செய்யக் கூடியவை என்று எண்ண வேண்டாம். ஒருவரின் துன்பம் தீர, மனதால் மற்றவர்களின் பிரச்சினைக்கு நீங்கள் உதவும் போது உங்களின் பிரச்சினைகள் தானாகவே குறைகின்றன.

குடும்பத்தில் உங்கள் பங்கு

குடும்பக் கஷ்டங்களை நன்றாக புரிந்து கொண்டு அக்குடும்பத்திற்கு முடிந்த அளவிற்கு உதவியாக இருக்க வேண்டும். அதிகமாக எதிர்பார்ப்புக்களை தவிர்க்கவும். எதிர்பார்ப்பு ஏமாற்றத்தை அளிக்கும். தான் பெற்ற குழந்தைகளிடம் செய்த கடமைக்காக முதுமைக் காலத்தில் பிரதிபலனை எதிர்பார்க்கக் கூடாது.

உயில்

வாரிசுகளுக்கு பலவிதத்தில் நன்மை அளிக்கும். தேவையில்லாத வழக்கை தவிர்க்கும். இதுவரை உயில் எழுதாமல் இருந்தால் அதை இன்றே செய்யவும்.

ஆன்மீக சிந்தனை

கடவுளை நம்பாதவர்கள் கூட வயது ஆக ஆக நமக்கு மேலே ஒருவன் இருக்கிறான் என்று சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். நம்மை அறியாமலேயே நமது மனம் ஆண்டவனிடம் நாட்டம் அதிகமாகி விடுகின்றது. நம்பிக்கை உள்ளவர்கள் ஆன்மீகத்தில் ஈடுபடுவதின் மூலம் மனச்சுமை குறைந்து தீய எண்ணங்களிலிருந்து மனம் விடுபட்டு, வாழ்க்கையை அமைதியாக வாழ்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி வசதி

வயதான காலத்தில் பணம் மிகவும் தேவை. இவ்வுலகில் உண்மையான அன்பிற்கோ, பாசத்திற்கோ மதிப்பு இல்லை. ஆனால் பணம் இருப்பவர்களைத்தான் உலகம் மதிக்கிறது.

நடுத்தர வயதிலிருந்தே முதுமைக் காலத்திற்காக ஒரு கட்டாய சேமிப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பணத்தை எதற்கும் செலவிடக்கூடாது.

- முதுமையில் நோய்களின் தொல்லைகள் இல்லாதிருந்தாலும் கால முறைப்படி மருத்துவ பரிசோதனை அவசியம்.
- ஐம்பது வயதிலிருந்து அறுபத்தைந்து வயது வரைக்கும் ஆண்டுக்கு ஒரு முறையும் அதற்கு மேல் ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் பரிசோதனை மிக அவசியம்.
- சுயசிகிச்சை முறைகளை தவிர்த்தல் நல்லது. மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் தொடர்ந்து மருந்துகளை உட்கொள்ளக் கூடாது.
- முதுமையில் தொடர்ந்து உடலில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் உடனே மருத்துவரை அணுகவும். உதாரணம் : திடீரென்று எடை குறைதல், கூடுதல்.

வயதான பெண் : எந்த டாக்டரிடம் சென்று முதலில் உடலை முழுமையாக பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்?

முதியோர் மருத்துவர் : உங்கள் குடும்ப மருத்துவரிடம் பரிசோதனை செய்து கொள்வதே சிறந்தது. வாய்ப்பு இருந்தால் முதியோர் மருத்துவரிடம் செல்லுங்கள். ஆனால் முதலிலேயே ஒரு சிறப்பு மருத்துவரை (Specialist) அணுகுவதை தவிர்ப்பது நல்லது.

"குறைந்த செலவில் பல நோய்களை தடுக்க கால முறைப்படி மருத்துவ பரிசோதனை அவசியம்".

உணவே மருந்து

முதியவர் : வயதான காலத்தில் சரியாக சாப்பிட முடியவில்லை. உடலும் பலவீனமாக இருக்கிறது. இதற்கு ஏதாவது ஒரு சத்தான உணவு சொல்லுங்கள் டாக்டர்.

முதியோர் மருத்துவர் : வயது ஆக ஆக பசியும், ருசியும் மாறும். உண்ணும் அளவும் குறையும். அளவு குறைந்தாலும் அதன் தரம் குறையாமல் இருக்க வேண்டும்.

- நாம் மூன்று வேளையும் அரிசியையே சாப்பிடுகின்றோம். அதை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து கோதுமை போன்ற தானியங்களை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- புரதச்சத்து அதிகமுள்ள எல்லா பருப்பு வகைகளையும், தினமும் உணவில் சிறிது சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- முதுமைக் காலத்திற்கு காளான் ஒரு சிறந்த உணவு. இதில் புரதச்சத்து அதிகம், மாச்சத்து குறைவு, கொழுப்பு இல்லை.
- தினமும் இரண்டு டம்ளர் பால் அவசியம்.
- எலும்பு வலிமை இழப்பதை தவிர்க்க சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ள பால், கேழ்வரகு, கீரை, கறிவேப்பிலை, சீரகம், மீன், நண்டு ஆகியவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- பச்சைக் காய்கறிகள் : கரட், வெள்ளரிக்காய், தக்காளி, வெங்காயம் அவசியம் தேவை.
- இரத்தச் சோகையை தவிர்க்க கீரை, தேன், பேரீச்சம்பழம், கல்லீரல் மிகவும் அவசியம். தினமும் ஏதாவது கீரை அல்லது இரண்டு பழ வகைகளை சேர்ப்பது நல்லது. வாழைப்பழம், கொய்யா, எலுமிச்சை, ஆரஞ்சு, பப்பாசி, மலச்சிக்கலைத் தவிர்க்க நார்ச்சத்து அதிகமுள்ள காய்கறிகள், கீரைகள், பழங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- காலையில் அதிக உணவும், மதியம் மிதமாகவும், இரவில் குறைவான உணவும் இருந்தால் நல்லது.

"சீரான உணவு, நல்ல உடல் நலத்திற்கு வழிவகுக்கும்". இவை யாவும் எமது சிவபூமி இல்லத்தில் எமக்கு கிடைக்கின்றதென மகிழ்ச்சியுடன் கூறிக் கொண்டு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

- ந. விக்னேஸ்வரன்
சிவபூமி முதியோர் இல்லம்
தொல்புரம்

ஈழகேசரி பொன்னையா ஞாபகார்த்த நிகழ்வு

அமரர் ஈழகேசரி பொன்னையா அவர்களது ஞாபகார்த்த நிகழ்வு இம்மாதம் 6ஆம் திகதியன்று காலை, அன்னாரால் ஸ்தாபிக்கப்பட்ட குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஏற்பாட்டில் குரும்பசிட்டி கலைஞானி மண்டபத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் நல்வாக்கு

நன்மாணாக்கன்

நல்ல மாணாக்கன் அதி காலையில் நித்திரை விட்டு எழும்புவான். அவன் கல்வியில் விருப்பமும், ஊக்கமும் உடைய வனாய் இருப்பான். வித்தியாசாலைக்கு ஒழுங்காகப் போவான். உபாத்தியாயரிடம் அன்பும் பணிவும் உடையவனாய் அவருடைய சொல்லுக்கு அடங்கி நடப்பான். அவர் சொல்லும் பாடங்களை வேறு சிந்தனையின்றிக் கேட்டு, கேட்ட பாடங்களைப் பலதரஞ் சிந்தித்து தனக்குச் சந்தோசமான பொருள்களைத் தன் வகுப்பு மாணாக்கர்களை வினாவியறிவான். அவர்கள் சந்தேகமுற்று வினவிய வைகளுக்குத் தான் உத்தரஞ் சொல்லுவான். அவர்களிடத்து அன்புஞ் சினேகமும் உடையவனாய் இருப்பான்.

அவன், தான் நோயாயிருக்குங் காலமும் தன் பிதா, மாதா முதலிய பெரியோர்கள் முக்கிய கருமங்களுக்காகத் தடைசெய்த காலமும் அல்லாதவற்றை எப்பொழுதாவது பள்ளிக் கூடத்துக்குப் போகாமல் இருக்கமாட்டான். போகாத பொழுதும் தான் வித்தியாசாலைக்கு வர முடியாமைக்குக் காரணத்தைத் தன் உபாத்தி யாயருக்குத் தெரிவித்து அவர் அனுமதி பெற்றுக் கொள்வான். வராத நாளிற் பாடத்தைத் தவறாமல் படித்து அதன் பொருளைக் கேட்டுத் தெரிந்து கொள்வான். தன் பாடத்தைக் கவனித்தலை விட்டுக் கெட்ட பிள்ளைகளுடைய வீண் பேச்சுக்களுக்கு ஒருபோதும் செவிகொடுக்க மாட்டான் அவர்களோடு கூட வீண் விளையாட்டுக்களுக்குப் போகமாட்டான் ஒருவேளை தான் செய்யுங் குற்றத்திற்காக உபாத்தியாயர் தன்னை தண்டித்தாராயினும், அவர் தன்மேல் வைத்த நேசத்தினால் அது செய்தார் என்று நினைத்து, தான் அவர்மேல் வைத்த அன்பை ஒருபோதும் மறக்கமாட்டான். ஒவ்வொரு வேளைகளில், தான் வாசிக்கும் பாடங்கள் கடினமாயிருந்தாலும், அதற்காகப் பயந்து அவைகளைப் படிக்காமல் விட்டுவிட மாட்டான். அவைகளை நாளுக்குநாட் படித்துப் பொருள் தெரிந்துகொள்ளுவான். பழம் பாடங்களை நாள்தோறும் சிறிது சிறிதாகப் படித்துப் போற்றிக்கொள்வான். இன்னும் கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் அறிந்தபடி நடத்தலுமே எனத்தெளிந்து, தான் படித்த பாடங்களிற் சொல்லியபடி நடக்கப் பழகிக்கொள்வான்.

இப்படி வித்தையை விரும்பிக் கற்பதும் நற்பழக்கமும் அகலாமல் இருக்கும் பொழுது அந்த நன்மாணாக்கனுக்கு வித்தியாசாலைக்குப் போகாமற் கழிக்கிற ஒருநாள் ஒரு யுகம் போலக் கவலைக்கிடமாய் கழியும். இந்த நன்மாணாக்கன், கல்வியையும் அதன் பயனாகிய அறிவையும் அவ்வறிவின் பயனாகிய ஒழுக்கத்தையும் உடையவனாய், அறிவுடையோர்களால் நன்கு மதிக்கப்பட்டுப், பொருளையும் புகழையும் இன்பத்தையும் அடைகிறான்.

கல்வியை விரும்பிக் கற்கும் மாணாக்கர்கள் இந்த நல்ல மாணாக்கனைப் போலப் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகப்போய், உபாத்தியாயருடைய சொல்லுக்கு அடங்கி நடந்து, பாலிய வயசிலே கல்வியை அவமதியாது கற்றுக் கொள்ளக் கடவர்கள். "சிறுமையிற் கல்வி சிலையிலெழுத்து" "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினுங் கற்கை நன்றே" "கேடில் விழுச் செல்வங் கல்வி" "அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்" என்னும் பெரியோர் வாக்குக்களை மாணாக்கர்கள் எப்பொழுதும் சிந்தித்தல் வேண்டும்.

(ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது பாலபாடம் 3ஆம் புத்தகம்)

செஞ்சொற்செல்வரின் அவுஸ்திரேலியா விஜயம்

அவுஸ்திரேலியா அபயகரம் அறக்கட்டளையின் அழைப்பின் பேரில் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி முதல் மே மாதம் 2ஆம் திகதி வரையிலான இருவார காலப்பகுதியில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

அபயகரம் அறக்கட்டளையின் 26ஆவது ஆண்டு விழாவின் போது இவர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார். அவுஸ்திரேலியா சிட்னி சைவ மன்றத்தின் ஏற்பாட்டில் சிட்னி முருகன் கோயிலில் மூன்று தினங்கள் தொடர் சொற்பொழிவாற்றினார். சிட்னி துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் நடந்த சி.வை.தாமோதரம்பிள்ளை நினைவு நிகழ்விலும் கலந்து கொண்டு நினைவுப் பேருரை ஆற்றினார்.

சிட்னியில் நடந்த மூத்த தமிழ் பிரஜைகள் சங்கத்தின் புதுவருடக் கொண்டாட்டத்திலும் , உலக சைவப் பேரவையின் அவுஸ்திரேலியா கிளை ஏற்பாடு செய்திருந்த வைபவத்திலும் சிறப்புரை ஆற்றியிருந்தார். அவுஸ்திரேலியா தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், அவுஸ்திரேலியாவிலுள்ள சிவபூமி ஆதரவாளர்களும் இணைந்து நடாத்திய 'ஆறு.திருமுருகனுடன் ஒரு மாலைப்பொழுது' சிறப்பு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை

சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே

சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே
பவத்தை நீக்கிப் பணிவது வீரமே
தவத்தைச் செய்து சலிப்பறல் வீரமே
உவத்தல் காய்தல் ஒறுத்திடல் வீரமே!

பொறுமை யைப்புறங் காப்பது வீரமே
வறுமை வந்தால் மகிழ்வது வீரமே
சிறுமை நீக்கிச் சிறந்திடல் வீரமே
மறுமை இன்பத்தை நாடுதல் வீரமே!

ஐம்பொ றியைய டக்கிடல் வீரமே
வெம்ப கையை விடுவது வீரமே
நம்பன் பாதத்தை நண்ணுதல் வீரமே
தம்மைத் தம்மால் அறிவது வீரமே!

கண்ணைப் போலறங் காப்பது வீரமே
மண்ணைப் பெண்ணை மறப்பது வீரமே
விண்ணைப் போல விளங்குதல் வீரமே
எண்ணம் யாவும் இறப்பது வீரமே!

ஓதி யோதி யுணர்வது வீரமே
சாதி பேதந் தவிர்வது வீரமே
நீதி நூல்வழி நிற்பது வீரமே
ஆதி பாதம் அணைவது வீரமே!

பாலமுருகன்

சின்னச் சின்னக் குழந்தையம்மா
எங்கள் பாலமுருகன் - புன்
சிரிப்புக்காட்டி மயக்கிடுவான்
எங்கள் பாலமுருகன்

வண்ணமயில் மீதிருப்பான்
எங்கள் பாலமுருகன் - கையில்
வடிவேலும் வைத்திருப்பான்
எங்கள் பாலமுருகன்

பிள்ளையாரின் நல்லதம்பி
எங்கள் பாலமுருகன் - சிறு
பிள்ளைகளின் இனியதோழன்
எங்கள் பாலமுருகன்

கள்ளமில்லா உள்ளங் கொண்டான்
எங்கள் பாலமுருகன் - நம்மைக்
காத்தருள்வான், காத்தருள்வான்
எங்கள் பாலமுருகன்!

- கவிஞர் அழ. வள்ளியப்பா

(நன்றி : இனிது இணைய இதழ் - 28.01.2018)

இலங்கையில் முதன்முதலாக 108 சிவலிங்கம் அமைந்த திருக்கோயில்

சிவபூமி அறக்கட்டளையினால் நாவற்குழி ஏ9 பாதையில் (நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்திற்கு முன்பாக) அமைக்கப்பட்டுவரும் திருவாசக அரண்மனை அடுத்தமாதம் திறந்து வைக்கப்பட விருக்கின்றது.

இந்த திருவாசக அரண்மனையின் மத்தியில் தெட்சணாமூர்த்தியை மூலமூர்த்தியாகக் கொண்ட திருக்கோயில் ஒன்று உருவாக்கம்பெற்றுள்ளது. இந்த திருக்கோயிலை மையமாகக் கொண்டு அதன் வெளிப்பகுதியில் கருங்கல்லிலான 108 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட இருக்கின்றன. இது இலங்கையில் முதல்முதலாக தென்திசை நோக்கிய தெட்சணாமூர்த்தியை மூலமூர்த்தியாகக் கொண்ட தனிக்கோயிலாகவும் அமையவிருப்பது குறிப்பிடத் தக்கது. அதேவேளையில் கருங்கல்லில் வடிவமைக்கப் பட்ட ஒவ்வொன்றும் சுமார் இரண்டரை அடி உயரமான 108 சிவலிங்க விக்கிரகங்களும் இந்த திருக்கோயிலில் அமைவதும் சிறப்பு அம்சமாகக் கருதப்படுகிறது.

இந்தியாவில் சில இடங்களில் 108 சிவலிங்கம் கொண்ட திருக்கோயில்கள் அமைந்திருப்பதை பலரும் அறிவார்கள். ஆனால் இலங்கையில் சிவபூமி திருவாசக அரண்மனையில் இத்தகைய திருக்கோயில் அமைவது தனித்துவமிக்கதாகும்.

கீரிமலையிலுள்ள விஸ்வநாதர் திருக்கோயில் சில ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிலுள்ள நர்மதா ஆற்றிலிருந்து இயற்கையாகப் பெறப்படுகின்ற (உளிகொண்டு செதுக்கப்படாத) சிவலிங்கங்கள் கொண்டு வரப்பட்டு வித்தியாசமான முறையில் வழிபாடு செய்யப்பட்டு வருவதும் இன்னொரு சிறப்பு அம்சமாகக் குறிப்பிடலாம்.

யாழ். நகரில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கக் கட்டடம்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்திற்கான மூன்று மாடிக் கட்டடமொன்று இம்மாதம் 6ஆம் திகதி காலை திறந்துவைக்கப் பட்டது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திரு. நா. வேதநாயகன் தம்பதிகள் மேற்படி கட்டடத்தை திறந்து வைத்தார்கள். வலுவிழந்தோருக்கான தொழிற்பயிற்சிகள் இங்கு மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைக் கதைகள்

சிவராத்திரிக் கதை

ஆத்மஜோதி நா.முத்தையா

பிரமதேவர் தான் படைத்த உலகின் அழகை எங்கும் பார்த்து ரசித்துக் கொண்டு வந்தார். ஓர் இடத்தில் வந்ததும் அப்படியே நின்றுவிட்டார். காரணம் தன்னால் படைக்கப் படாத பொருள் ஒன்றைப் பார்த்து விட்டார். இவர் பார்த்த பொருள் பாற்கடலில் அறிதுயில் கொண்டிருந்தது. பிரமா காலால் தட்டி எழுப்பினார். நீ யார்? என்னால் படைக்கப்படாத ஒன்றை இன்றுதான் பார்த்தேன் என்றார்.

"நீ எப்படி என்னைப் படைத்திருக்க முடியும்? நான் தானே உன்னைப் படைத்தவன்".

"உலகம் முழுவதையும் படைத்தவன் நானிருக்க நீ என்னைப் படைத்தவன் என்று சொல்ல உனக்கு வெட்கமில்லையா?" என்று கூறினார் பிரமதேவர்.

வாய்ச்சண்டை, ஆயுதச் சண்டையாகி முடிவு காணாத சண்டையாகிவிட்டது. காலம் நீண்டு கொண்டே போனது. சிவபெருமான் இவர்கள் இருவருக்கும் அறிவுச்சுடர் கொளுத்த விரும்பினார். இருவருக்கும் மத்தியில் சோதியாக நின்றார் சிவபெருமான்.

சோதியைப் பார்த்து இருவரும் நீ யார்? என்று கேட்டனர். நான் பிரம்மம் என்றது சுடர். அப்படியானால் எங்கள் இருவரில் யார் பெரியவர் என்று நீ சொல்ல வேண்டும் என்று கேட்டனர்.

இந்தச் சோதியின் அடியையோ முடியையோ யார் காண்கின்றனரோ அவர்கள் தான் பெரியவர்கள் என்று பதில் இறுத்தது சோதிப்பிரம்மம்.

உடனே பிரம்மா அன்னப்பறவையாகி சோதியின் முடியைத் தேடிப் புறப்பட்டார். திருமால் பன்றியுருக் கொண்டு அடியைத் தேடிப் புறப்பட்டார். திருமால் அயர்ச்சி கொண்டு தன்னால் சோதியின் அடியைக் காணமுடியாது என்று தனது தோல்வியை ஒப்புக்கொண்டுவிட்டார்.

அன்னம் சோதியின் முடியைத் தேடிப் பறந்து கொண்டே சென்றது. நன்றாய்க் களைத்து விட்டது. தோல்வியை ஒப்புக்கொள்ள அகங்காரம் விட வில்லை. நீரில் ஆழ்ந்து கொண்டு செல்பவனுக்கு துரும்பும் தூணாய்த் தெரியுமாம். அது போல தோல்வியைத் தழுவுகின்ற அன்னப் பறவைக்கு ஓர் ஆதாரம் தென்பட்டது. அன்னம் ஒரு தாழம்பூவைக் கண்டது.

அன்னம் : நீ எங்கிருந்து வருகிறாய்?

தாழம்பூ : நான் சிவனுடைய முடியில் இருந்து வருகின்றேன்.

அன்னம் : சிவனுடைய முடி எவ்வளவு தூரத்தில் உள்ளது?

தாழம்பூ : நான் எத்தனையோ யுகங்களாக விழுந்து கொண்டிருக்கிறேன். இன்னும் விழுந்த பாடில்லையே.

அன்னத்திற்கு தன்னம்பிக்கையில் ஈடாட்டம் வந்துவிட்டது. குறுக்கு மூளை வேலை செய்தது.

அன்னம் : தாழம்பூவே எனக்கொரு உதவி செய்வாயா?

தாழம்பூ : என்ன உதவி?

அன்னம் : அது ஒரு சிறு உதவிதான்.

தாழம்பூ : அது என்ன என்பதை சொல்லுங்களேன்.

அன்னம் : ஒரு சிறு பொய்.

தாழம்பூ : எதற்காகப் பொய்?

அன்னம் : நானோ சிவனின் முடியைத் தேடிச் செல்கின்றேன். நீயோ முடியில் இருந்து வருகின்றாய். நானும் முடியைக் கண்டேன். முடியிலிருந்து உன்னோடு தான் வருகின்றேன் என்று சொல்வது தான் அந்த உதவி. இது ஒருவருக்கும் பாதகம் இல்லாத பொய்தானே. பொய் சொல்வதற்குத் தயங்கிய தாழம்பூ அன்னத்தின் பேச்சில் மயங்கி பொய் பேசச் சம்மதித்து விட்டது.

தாழம்பூ பொய் பேசினபடியால் அப்பூவைச் சிவனுடைய அர்ச்சனைக்கு எடுப்பதில்லை. திருமாலுக்கு உலகமெல்லாம் கோயில். இந்தியாவில் மாத்திரம் பத்தாயிரத்துக்கும் மேலான கோயில்கள் இருக்கின்றன. பிரம்மதேவருக்கு ஒரு கோயில்தானும் இல்லை. இதனால்தான் சத்தியமே கடவுள் என்பார்கள். உள்ளத்தின் இயல்பு உண்மை. மெய்யின் இயல்பு மெய்மை. வாயின் இயல்பு வாய்மை.

அப்பர் சுவாமிகள் இலிங்கபுராணத் திருக்குறுந் தொகையில் பிரம விஷ்ணுக்கள் அடிமுடிதேடிய செய்தியை அடிப்படையாக வைத்து ஒரு பதிகமே செய்துள்ளார். அதில் கடைசிப் பாடல் பின்வருமாறு,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்துங் காண்கிலார்
இங்குற்றே னென்றி லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

சிவன் இலிங்கத்தே தோன்றிய தினம்தான் சிவராத்திரி என்று சொல்லப்படுகின்றது. சிவராத்திரி என்ற சொல், சிவனுடைய ராத்திரி, சிவமான ராத்திரி, சிவனை அர்ச்சிக்கும் ராத்திரி, சிவனுக்கு இன்பமான ராத்திரி என்று பலவகையான பொருளைத் தரும். சிவமான ராத்திரி என்பதே இவைகளில் மிகப் பொருத்தமானது.

மாசிமாத கிருஷ்ண சதுர்த்தசியில் நள்ளிரவில் சிவபெருமான் இலிங்கத்தில் தோன்றினார். இந்த நேரம் இரவு பன்னிரண்டு மணிதொடங்கி ஒன்றரை மணி வரையுள்ள காலமாகும். இக்காலம் இலிங்கோற்பவ காலம் என்று அழைக்கப்படும். ஆதலால் இப்பொழுதும் அந்த இரவில் உலகிலுள்ள எல்லா இலிங்கங்களிலும் சிவன் தோன்றுகின்றார்.

அன்று சிவபூசை எல்லோருக்கும் விருப்பத்தைக் கொடுக்கக்கூடியது. அன்று காலை குளித்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிவாலயம் சென்று பஞ்சாட்சரம் அல்லது சிவநாமத்தை ஜபிக்க வேண்டும்.

கருணை வடிவான தேவி நமக்காகச் சிவபூசை செய்த நாள் சிவராத்திரி ஆகும். "சிவம்" என்ற சொல்லுக்கே துன்பத்தைத் துடைக்க வல்லது என்று அர்த்தம்.

ஒரு சமயம் உமாதேவியார் விளையாட்டாக சிவ பெருமானுடைய கண்களை அவருக்குப் பின்புறம் வந்து பொத்தி விடுகிறாள். எங்கும் பேரிருள் பரவுகிறது. இந்நிலையில் தேவர்கள் சிவபூசை செய்த இரவே சிவராத்திரி என்றும் கூறப்படுகின்றது.

பிரமாவும் விஷ்ணுவும் தோல்வியுற்று தம் செருக்கெல்லாம் ஒழித்து சிவனைச் சரண்புகுந்து வழி பட்டு உய்வு தேடினர். ஆதலினால் திருவண்ணா மலையில் சிவராத்திரி வழிபாடும் சிறப்புறுவதாயிற்று.

அந்தக்காலத்தில் சைவர் மாத்திரம் அன்றி சிவலிங்கத்தை எல்லோருமே வழிபட்டனர். அதில் சிவம் இருக்கிறது. விஷ்ணு இருக்கிறார். எல்லாக் கடவுளையும் ஒன்று சேர்த்தே லிங்கம் விளங்குகிறது. தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்குமான இடமே லிங்கம் எனப்படும். லிங்கத்தின் பீடம் ஆவுடையார் எனப்படுகின்றது. ஆவுடையார் சக்திரூபம், பாணம் சிவரூபம், பீடம் கிரியா சக்தி வடிவம், பீடத்தின் அடிப்பாகம் பிரம்ம ரூபம், நடுப்பாகம் விஷ்ணு ரூபம், இதைத்தான் திருமூலர்.

மலர்ந்த அயன் மாலுருத்திரன் மகேசன்
பலந்தரு ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரு சக்தி சிவன் வடிவாகிய
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே

என்று அருளியுள்ளார்.

(நன்றி : ஆத்மஜோதி முத்தையா அவர்களின் 84 ஆவது ஜெயந்தி ஞாபகார்த்த மலர் - 2001)

பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் மறைவு

யாழ்.பல்கலைக்கழக விஞ் ஞானத் துறையின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் இம்மாதம் 6ஆம் திகதியன்று லண்டனில் கால மானார். பிரபல கல்வி மானும், சிறந்த சமூக சேவை யாளருமான பேராசிரியர் அவர்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயா கல்லூரி என்பவற்றின் புகழ்பூத்த பழைய மாணவராவார். இவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளைத் தலைவராகவும் நீண்ட காலம் பணியாற்றினார்.

இசைக்கலைஞர் அளவையூர் சிவஞானசேகரம் மறைவு

புகழ்பூத்த இசை ஆசிரியர் அளவையூர் சிவஞானசேகரம் இம்மாதம் 8ஆம் திகதியன்று காலமானார். இவர் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் கற்று, யாழ்.பரி. யோவான் கல்லூரியில் பல

வருடங்கள் இசை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். யாழ். இளங் கலைஞர் மன்றத்தின் கௌரவ செயலாளராக பல வருடங்கள் கடமையாற்றிய பெருமைக் குரியவர். இணுவில் கந்தசுவாமி கோயில் இளந் தொண்டர் சபையின் இசை ஆசிரியராக விளங்கிய இவர், பல கலை ஞர்களை உருவாக்கியவர். வருடந் தோறும் நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழா காலத்தில் வசந்தமண்டப வாசலில் இசைக் கச்சேரி நடத்தி பலரது பாராட்டைப் பெற்றவர். அன்னாரின் திடீர்மறைவு ஈழத்து இசை உலகுக்கு பேரிழப்பாகும்.

ஜேர்மனியில் இணுவில் ஒன்றியத்தின் கலைமாலை நிகழ்வு

ஜேர்மனியில் உள்ள இணுவில் ஒன்றியத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி கலைமாலை நிகழ்வு கடந்த ஏப்ரல் மாத இறுதியில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இலங்கையிலிருந்தும் டென்மார்க், சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்தும் பலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மேற்படி வைபவத்தின் போது பல்வேறு கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிக்காவலர் கந்தையா நீலகண்டன் அவர்களுக்கு இந்து மாமன்றத்தின் அஞ்சலி நிகழ்வு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராக இருந்து மறைந்த அறநெறிக்காவலர் கந்தையா நீலகண்டன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாமன்றம் ஏற்பாடு செய்திருந்த நினைவேந்தல் நிகழ்வு கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதியன்று காலை 10.30 மணிமுதல் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களும், யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருததுறை விரிவுரையாளர் சிவஸ்ரீ பத்மநாத சர்மா அவர்களும் பிரார்த்தனை உரைகளை வழங்கினார்கள். தொடர்ந்து இந்து மாமன்ற பிரதித் தலைவர் திரு. மா. தவயோக ராஜா, ஓய்வுநிலை பிரதம நீதியரசர் க.ஸ்ரீபவன் அவர்கள், மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர் திரு.எம்.ஆர். ராஜ்மோகன், மாமன்ற பொதுச் செயலாளரும், இந்து வித்தியா விருத்திச் சங்கத் தலைவருமான திரு.வே.கந்தசாமி, மாமன்ற உப தலைவரும், மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் எஸ்.துரைராசா அவர்கள், திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபை தலைவர் திரு.செ.இராகவன், விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன், நாவலர் நற்பணிமன்றத் தலைவர் திரு.ந.கருணை ஆனந்தன், ஓய்வுநிலை அதிபர் திரு.ந. முத்துக்குமாரசாமி, யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை விரிவுரையாளர் திரு. எம்.ரமணராஜா, மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர் வைத்தியகலாநிதி மு.கதிர்காமநாதன், கொழும்பு இந்துக் கல்லூரி, (இரத்மலானை) அதிபர் திரு.எஸ்.ஜெயக்குமார், மேல்மாகாண சபை உறுப்பினர் திரு. கே.ரி.குருசாமி, கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் திரு.தம்பு சிவசுப்பிரமணியம், கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி சாந்தி கேசவன், சைவவித்தகர் திரு.வெ.சசிகரன், கொழும்பு மகளிர் இந்து மன்றம் திருமதி யமுனா கணேசலிங்கம், ஆலையடிவேம்பு இந்து மாமன்றத் தலைவர் திரு.வெ.சந்திரசேகரம் ஆகியோரின் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன. மாமன்ற உபதலைவரும், சமூகநலன் குழுத்தலைவருமான விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா நன்றியுரை வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது மாமன்ற ஆன்மீக இதழான இந்து ஒளி - அமரர் நீலகண்டன் அஞ்சலி சிறப்பிதழும் வெளியிட்டு வைக்கப்பட்டது. சக்தி தொலைக் காட்சி அறிவிப்பாளரும் இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரி பழைய மாணவனுமான திரு.இ.ராஜ்குமார் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

சீமாட்டி லீலாவதி இராமநாதன்

இனம், மொழி, மதம் என்ற அம்சங்களால் வேறுபட்ட நிலையில் அவுஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்தவரான ஹரிசன் அம்மையார் பின்னாளில் தமிழ் இனம், தமிழ்மொழி, சைவ மதப் பண்பாட்டுடன் ஒன்றிணைந்தவராக யாழ்ப்பாண மண்ணில் வாழும் நிலையைப் பெற்றமையானது ஒரு வரலாற்று நிகழ்வாகவே சொல்லப்படுகின்றது. இலங்கையின் முது பெரும் கல்விமான்களுள் ஒருவரும், தமிழ், சிங்கள மக்களால் தேசியத் தலைவராக மதித்துப் போற்றப் பட்டவரும், சைவத்தமிழ் காப்பாளராகவும், அரசியல் சமூக நல சேவையாளராகவும், சிந்தனையாளராகவும். வள்ளலாகவும் விளங்கிய சேர் பொன். இராமநாதன் அவர்களின் வாழ்க்கைத் துணைநலமாக விளங்கியவர்தான் ஹரிசன் அம்மையாரான சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்கள்.

1870ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் பிறந்தவரான இவர் 1906 ஆம் ஆண்டு சேர் பொன்.இராமநாதன் அவர்களை திருமணம் செய்து கொண்டார். இவரது சகல செயற்பாடுகளுக்கும் உடனிருந்து உதவி வந்தவர் சீமாட்டி லீலாவதி இராமநாதன். பல நூல்களை எழுதியிருக்கின்றார். இவரது சமூக, சமய கலாசார பணிகளின் மேன்மை கண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் 1942ஆம் ஆண்டு கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கி கௌரவித்தது. இவர் 1953 ஜனவரி 31ஆம் திகதியன்று காலமானார்.

பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப் பேருரை

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை, இம்மாதம் 3ஆம் திகதியன்று கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. மேற்கு அவுஸ்திரேலியா மேர்டொக் பல்கலைக் கழகத்தின் பொருளியற்துறை விரிவுரையாளர் கலாநிதி அமீர் அலி "நவதாராண்மை பொருளாதாரங்களும் பொருளியற் சிந்தனையும்" என்ற பொருளில் நினைவுப் பேருரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமக் கந்தனுக்கு செப்புக்கூரையை உருவாக்கிய மட்டக்களப்பு கலைஞர்

மட்டக்களப்பில் வாழ்ந்த கலைஞர் அமரர் விநாயகமூர்த்தி ஆச்சாரி அவர்களே தனது அயராத முயற்சியினால் கதிர்காமக் கந்தன் ஆலயத்திற்கான செப்புக்கூரையை உருவாக்கிக் கொடுத்துள்ளார் என்ற தகவல் இப்போது வெளியாகியிருக்கின்றது.

1950களில் முருக பக்தனாகிய விநாயகமூர்த்தி ஆச்சாரி அவர்கள் பொதுமக்கள் ஒவ்வொருவரிடம் இருந்தும் ஒரு ரூபா வீதம் நிதியுதவி கோரி, பலரும் வழங்கிய உதவியினால் அன்றைய கதிர்காம கப்புறாளைமாருடன் தொடர்பு கொண்டு பேசி, கதிர்காமக் கந்தனின் ஆலயக் கூரையை செப்புக் கூரையாக மாற்றிக் கொடுத்தார் என அண்மையில் அவரது பேரன் திரு. ஈஸ்வரராஜா குலராஜா வெளியிட்டிருக்கும் முகநூல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். பல புகைப்படங்களுடன் மேற்படி தகவல் தரப்பட்டுள்ளது.

கலைஞர் விநாயகமூர்த்தி சிறந்த வயலின் வித்துவானாகவும், களிமண்ணில் இருந்து பொம்மைகள், உருவச்சிலைகளை அமைப்பதில் வல்லவராகவும், ஆன்மீக ஈடுபாடுள்ளவராகவும் விளங்கினார் என்றும் அந்த முகநூல் பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வரின் 85ஆவது பிறந்ததின வைபவம்

கோப்பாய் பழம் றோட்டில் அமைந்துள்ள சுப்பிரமுனிய கோட்டத்தை பலவருட காலமாக தலைமை தாங்கி வழிநடத்தி வரும் திருமதி சிவலோஜினி கனகரத்தினம் அம்மையாரின் 85ஆவது பிறந்தநாள் வைபவம் இம்மாதம் (வைகாசி) 5ஆம் திகதி அன்று சிறப்பாக நடைபெற்றது. பலவருட காலமாக மாணவர்கள் பலரை அரவணைத்து இலவச வகுப்புக்களை நடத்தி நன்நெறிகளைப் புகட்டி வரும் அம்மையாரின் சேவையை பலரும் பாராட்டி வருகிறார்கள்.

சமயச் சொற்பொழிவாளர் ஆறுமுகம் சிவநாதன் அவர்களுக்கு மணி விழா

சமயச் சொற்பொழிவாளரும் புற்றளை மகா வித்தியாலய அதிபருமான திரு.ஆறுமுகம் சிவநாதன் அவர்களின் மணிவிழா இம்மாதம் 7ஆம் திகதி காலை பருத்தித்துறை (எஸ்.எஸ். கொம்பிளக்ஸ்) கிராமக்கோடு மண்டபத்தில் ஒய்வுநிலை மாகாண கல்விப் பணிப்பாளர் திரு.வ.செல்வராசா தலைமையில் இடம்பெற்றது.

திரு.ஆ.சிவநாதன் சிறுபராயத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் மகாதேவா ஆச்சிரமத்தில் தவத்திரு வடிவேல் சுவாமிகளின் ஆற்றுப்படுத்தலில் கற்றவர். இவர் தற்போது மகாதேவா ஆச்சிரமத்தின் அறங்காவலர் சபையில் முக்கிய பொறுப்பை ஏற்று ஆச்சிரமத்தை நிர்வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஆரோக்கியத்தில் திருமந்திரம் நூல் வெளியீடு

திரு.கா.வைத்தீஸ்வரன் எழுதியிருக்கும் ஆரோக்கியத்தில் திருமந்திரம் என்ற நூலின் வெளியீடு, இம்மாதம் 20ஆம் திகதி மாலை 4.30 மணி முதல் இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு தமிழ்ச்சங்கம் நடாத்திய சர்வதேச புத்தக தின பரிசளிப்பு விழா

கொழும்பு தமிழ்ச்சங்கம் சர்வதேச புத்தக தினத்தையொட்டி தேசிய மட்டத்தில் நடத்தியிருந்த வாசகர் மனப்பதிவு கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்காக பரிசில்கள் வழங்கும் வைபவம் கடந்த மாதம் தமிழ்ச்சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது.

சிவபூமி வாசகர்களுக்கு.....

கடந்த மாசி மாதத்திலிருந்து மாதாந்த செய்திப் பத்திரிகையாக உதயமாகியுள்ள 'சிவபூமி'யின் மூன்றாவது இதழ் உங்கள் கரங்களுக்குக் கிடைத்திருக்கின்றது. சிவபூமி அறக்கட்டளையின் வெளியீடாக 'சிவபூமி' ஒவ்வொரு மாதமும் மலருவதற்கு திருவருள் கைகூடி இருக்கின்றது.

இந்து சமயம், சமூகம் சார்ந்த விஷயங்களை தாங்கிய வண்ணம் குறிப்பாக சமயக் கட்டுரைகள், கவிதைகள், ஆலய உற்சவங்கள் தொடர்பானதும் சமய நிகழ்வுகள் சம்பந்தப் பட்டதுமான செய்திகள், படங்கள், இந்துக்களின் விஷேட தினங்கள் தொடர்பான சிறப்புக் கட்டுரைகள், சமய வரலாற்றுத் தகவல்கள் போன்ற பல விடயங்களை 'சிவபூமி' ஊடாகத் தருவதற்கு விரும்புகின்றோம்.

ஆலயங்களின் அறங்காவல் சபையினர், பரிபாலன சபையினர் மற்றும் ஆலய பிரதம குருமார்கள் தங்கள் ஆலய உற்சவங்கள் தொடர்பான அறிவித்தல் பிரசுரங்களை அல்லது ஆலய கடிதத் தலைப்பில் அத்தகைய விபரங்களை எழுதி 'சிவபூமி' பத்திரிகைக்கு அனுப்பி வைத்தால் அவற்றை வெளியிடுவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

இந்து மக்களாகிய நீங்கள் தரும் ஆதரவும், ஒத்துழைப்பும் 'சிவபூமி' செய்திப் பத்திரிகையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கும் என்பது எங்கள் எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமாகும்.

- சிவபூமி அறக்கட்டளை -

சிவபூமி
மாதாந்த செய்திப் பத்திரிகை

சந்தா விபரம்

சிவபூமி - மாதாந்த செய்திப் பத்திரிகைக்கு வருடாந்த சந்தா செலுத்துவதன் மூலம் கிரமமாக பத்திரிகையை பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமாக ஒவ்வொரு மாதமும் பத்திரிகை அனுப்பிவைக்கப்படும்.

வருடாந்த சந்தா (தபாற் செலவு உட்பட)

உள்நாடு : ரூபா 500/=

வெளிநாடு : 25$ (அமெரிக்க டொலர்)

தொடர்புகளுக்கு : சிவபூமி அறக்கட்டளை
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தொலைபேசி இல : 021 222 7938

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சைவப் பேரவையின் அவுஸ்திரேலியா கிளை ஏற்பாடு செய்திருந்த வைபவத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்

குரும்பசிட்டி சன்மார்க்க சபை ஆண்டுதோறும் வழங்கிவரும் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத் துரை ஞாபகார்த்த விருதை இவ்வாண்டு நாடகத் துறை சார்ந்த கலைஞரான திரு.நா.விமலநாதன் அவர்கள் பெற்றுக்கொண்டார். இம்மாதம் 6ஆம் திகதி அன்று குரும்பசிட்டியில் நடந்த ஈழகேசரி பொன்னையா நினைவு நிகழ்வின்போது மேற்படி விருது வழங்கப்பட்டது.

அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் அறநெறிக்காவலர் கந்தையா நீலகண்டன் அவர்களது மறைவையிட்டு கொழும்பு தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்து நடாத்தியிருந்த நினைவேந்தல் நிகழ்வு

Digitized by Arunachalam Foundation
noolaham.org | aavanaham.org

Registered in the Dept.of Post of Sri Lanka
Under No. QD/194/News/2018

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் 19ஆவது சைவ மாநாடு

சைவ மாநாட்டில் கலந்து கொண்ட நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன முதல்வர் சற்குரு வேலன் சுவாமிகள் ஆகியோரையும், திரு.சூரிப்பிள்ளை பாசிங்கம், வைத்திய நிபுணர் திருமதி கருணாகரன், வைத்திய நிபுணர் சிற்றம்பலம் இராஜசுந்தரம், தொழிலதிபர் திரு.வே. சிவசுந்தரம் ஆகியோருக்கு நல்லை ஆதீன முதல்வர் மாநாட்டு சிறப்பு மலரை வழங்குவதையும், அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

அவுஸ்திரேலியா சிட்னியில் பேரறிஞர் சி.வை.தாமோதரம்பிள்ளை நினைவுப் பேருரை

அவுஸ்திரேலியா சிட்னி நகரில் நடந்த சான்றோர் விழாவில் பேரறிஞர் சி. வை.தாமோதரம்பிள்ளை நினைவுப் பேருரை ஆற்றிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களுக்கு வைத்தியகலாநிதி பாரதி அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்த நிகழ்வின் போது.

Our Services

OffSet Printing

Book Binding

Screen Printing

9789557420004

ISBN 978-955-7420-00-4

இந்தப் பத்திரிகை கோவிலாவில் சிவபூமி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தால் சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டது. (10.05.2018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org